Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 சித்திரை-03 16-04-2005 சனிக்கிழமை ஓசை 57

புதிய இடத்தில் புதுப்பொலிவுடன்
சிறி கருமாரி நகையகம்
அசல் 22 கரட் தங்கத்தில்
தங்கநகைகளை
செய்து பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்
சிறி கருமாரி நகையகம்
205/6,கஸ்தூரியார் வீதி, ராஜா தியேட்டர் கட்டடம், யாழ்ப்பாணம்.
(சி-11480) தொ.பே: 021-2225365

## பொதுக் கட்டமைப்பு,அரசியல் நிலைமைகள்; நோர்வே விசேட தூதுவர் எரிக் ஆராய்வார்

### கொழும்பு நோர்வேத் தூதரகம் அறிவிப்பு

(கொழும்பு)

நோர்வேயின் இலங்கைக்கான விசேட சமாதானப் பிரதிநிதி எரிக் சூல்ஹெய்ம் இவ் வார இறுதியில் இலங்கைக்கு வருகை தருகிறார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை அவர் இலங்கையில் தங்கியிருப்பார் என்று இலங்கைக்கான நோர்வேத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் பயணத்தின்போது ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மீளமைப்பிற்கான பொதுக்கட்டமைப்புக் குறித்து ஆராய்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சமாதான நடவடிக்கைகள் தொடர்பான விடயங்கள் குறித்தும் எரிக் சூல்ஹெய்ம் கலந்துரையாடுவார். எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை புத்தளத்திற்குப் பயணம் செய்யும் எரிக் சூல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருக்கோவில் பிரதேச செயலாளர் இனம்தெரியாதோரால் சுட்டுக்கொலை!

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேச செயலாளர் நேற்றிரவு இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணமடைந்துள்ளார்.

ஏ.எச்.ஏ தவராசா (வயது 38) என்பவரே மரணமான பிரதேச செயலாளர் ஆவார்.

இவர் நேற்றிரவு பிரதேச செயலகத்தில் தனது பணியினை முடித்துக்கொண்டு புறப்பட்ட சமயம் அங்கு வந்த இரண்டு இளைஞர்களால் சுடப்பட்டுள்ளார்.

இவரது மரணம் தொடர்பாக திருக்கோவில் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

### பொலநறுவை - சொறிவில கிராமத்தில்

# தேசவிரோதக் குழுவினர் ஒன்பது பேர் சுட்டுக்கொலை!

### ஐந்து சடலங்கள் பொலிசாரால் மீட்கப்பட்டன

(மட்டக்களப்பு)

**பொலநறுவை மாவட்டம் சொறிவில கிராமத்தில் தமிழ் தேசவிரோதக் குழுவினரின் முகாம் பகுதியில் நேற்று அதிகாலையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் அம்முகாமில் தங்கிருந்த ஒன்பது பேர் கொல்லப்பட்டதாகவும், இதில் மூன்று பேர் ஈ.என்.டி.எல்.எவ். குழுவைச்சேர்ந்தவர்கள் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.**



இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, சில தினங்களுக்கு முன்னர் சொறிவில காட்டுப் பகுதியில் அமைக்கப்பட்ட இம்முகாமில் கருணா குழு என்ற பெயரில் சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பினரின் ஆதரவுடன் செயற்படும் குழுவினரும், ஈ.என்.டி.எல்.எவ். குழுவைச் சேர்ந்த சிலரும் தங்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. தீவுச்சேனை முகாம் குறித்துத் தகவல்கள் வெளியான பின்னர் பாதுகாப்புக் கருதி அங்கிருந்து புறப்பட்ட குழுவே சொறிவில கிராமப் பகுதியில் முகாம் அமைத்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.இங்குஐந்து கொட்டகைகள் இருந்ததாகவும், இதில் மூன்றில் ஆட்கள் தங்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் கருணா குழுவினர் என அழைக்கப்படும் ஆறு பேரும், ஈ.என்.டி.எல்.எவ்.பைச் குழுவைச் சேர்ந்த மூவரும் கொல்லப்பட்ட தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களில் ஈ.என்.டி.எல்.எவ்.பைச் சேர்ந்த விஜயனும் காய

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஏமாற்றப்பட்டதை ஏற்கவேண்டும்

### ஐ.தே.க. சாடல்

(கொழும்பு)

கடந்த வரவு-செலவுத் திட்டத்தின் யோசனைகளுக்கு ஆதரவாக வாக்களித்த எவருக்கும் தனியார்மயப் படுத்தலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் அருகதை இல்லை என ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

வரவு - செலவுத் திட்டத்தை தயாரித்தவர்கள் திறமையாக அரசாங்கத்தினுள் உள்ள கட்சிகளை ஏமாற்றி தனியார் மயப்படுத்தலுக்கு வேண்டிய திட்டங்களை செய்திருப்பதாக் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அன்று வரவுசெலவுத் திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வாக்களித்தவர்கள் தாம் ஏமாற்றத்துக்கு உள்ளாகியிருப்பதை மக்கள் முன்னிலையில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (32)

## மே தினப் பேரணிக்கு யாழ்.இல் ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

தமிழ்த்தேசியக் கூட்டுறவுத் தொழிற்சங்கம் யாழ்.குடாநாட்டில் மாபெரும் பேரணிக்கும், பொதுக் கூட்டத்திற்கும் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

உழைக்கும் மக்களின் குரல் உலகின் முற்றத்தில் ஓங்கி ஒலிக்கும் நாளான மே 1இல் தமிழ் இனத்தின் எழுச்சியின் வடிவமாகவும் உழைக்கும் மக்கள் மீதான அடக்குமுறையைச் சிதைக்கும் முகமாகவும் இப்பேரணி பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக பிரதான வளாகத்திலிருந்து ஆரம்பமாகி இராமநாதன் வீதி வழியாக காங்கேசன்துறை வீதி தட்டாதெருச்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாரிய குண்டுகளை வெடித்து படையினர் கொண்டாட்டம்!

(தென்மராட்சி)

எழுதுமட்டுவாள், மருதங்குளம் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்காப் படையினர் பாரிய குண்டுகளை வெடிக்க வைத்துப் புத்தாண்டைக் கொண்டாடினர்.

படையினர் வெடிக்க வைத்த பாரிய குண்டுகளின் சத்தம் இப்பிரதேசம் எங்கும் இடைவிடாது கேட்டன. படையினரின் இத்தகைய செயல் மக்களிடத்தில் பெரும் விசனத்தைத் தோற்றுவித்துள்ளது.

இதற்கிடையில் இப்பகுதிகளிலுள்ள வீடுகள் சிலவற்றுக்கு இராணுவப் புலனாய்வுத்துறையினர், பிஸ்டல் சகிதம் சென்று பல்வேறு கேள்விகளைக் கேட்டு அச்சுறுத்தி வருவதாகவும், இதனால் மக்கள் அச்சத்தில் ஆழ்ந்திருப்பதாகவும் தெரியவருகிறது. (28)

## கிறிஸ்டினா றொக்காவின் விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும்

### அமெரிக்கத் தூதரகம் அறிக்கை

(கொழும்பு)

அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்க செயலாளரின் இலங்கை விஜயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாகுமென இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் நேற்று அறிவித்தது.

அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் கிறிஸ்டினா றொக்கா எதிர்வரும் திங்கட்கிழமை இலங்கைக்கு வருகை தருகிறார் என அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

மூன்று நா ட்கள் தங்கியிருக்கும் இவர் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரடியாகச் சென்று பார்வையிடுவார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்ப விட்டுக் கொடுப்புக்கு முன்வந்துள்ளோம்

### -அயர்லாந்து அமைச்சரிடம் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

இணைந்து செயற்படுவதன் மூலம் பரஸ்பர நம்பிக்கையை வளர்க்க முடியும் என்ற தோற்றப்பாட்டிற்கமைய நோர்வேயினால் தயாரிக்கப்பட்ட திட்ட வரைவை விட்டுக் கொடுப்புக்களுடன் ஏற்றுக்கொண்டுள்ளோம் என்று தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அயர்லாந்தின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரிடம் தெரிவித்துள்ளார். சுனாமிப் பேரலையை அடுத்து மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மீட்பு, நிவாரணப் பணிகள் தொடர்பாக விடுதலைப்புலிகளின் தலைமைத்துவம் மிக விழிப்புடன் செயற்பட்டது என்றும் அவர் கூறினார்.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர், அயர்லாந்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கொனோர் லெனிகன் மற்றும் பிரதி வெளிவிவகார அமைச்சரை நேற்று முன்தினம் சந்தித்து தற்போதைய

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**சீமெந்துக்கல் விற்பனைக்குண்டு**

அன்பு வாணிபத்தில் சீமெந்துக் கல் விற்பனைக்குண்டு. அளவு-6"X4"X12" -கிடைக்குமிடம் அன்பு வாணிபம், அந்தோனியார் கோவிலடி, அளம்பில். விலை ஒரு கல் 20/= (5908)

**வகுப்புக்கள் ஆரம்பம்**

**ஆதவன்கல்வி நிலையம் கிளிநொச்சியில்**

2007-A/L கலை வகுப்புக்கள் 15.04.2005-இல் ஆரம்பமாகிவிட்டது. விபரங்களுக்கு சி.மகேந்திரன் (நிர் வாகி) (5992)

**ஏல விற்பனை**

கிளி/மாவட்ட கூட்டுறவுச் சங்கங் களின் ஒன்றியத்தின் தலைமைப் பணிமனையில் 20.04.2005 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பொயிலர் ராங் 01, நீர் இறைக்கும் இயந்திரம்-02 என்பன பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப் படும். (5911)

**N.E.C கல்வி நிலையம்**
**A9 வீதி,கிளிநொச்சி**

A/L 2007 மாணவர்களுக்கான சகல பாடங்களும் 15.04.2005 காலை 9.00 மணிக்கு எமது தனித்துவமான ஆசிரியர்களால் ஆரம்பித்துள்ளது.

**சுதேசி கோழிப்பண்ணை**
**தங்கம் பெறும் தேர்வு**

சுதேசி கோழிப்பண்ணையில் இறைச்சிக் கோழி கொள்வனவு செய்தவர்களில் குறி.இல. 036264 தொடர் இல. 30267 உடைய விற் பனை அட்டை பெற்ற வாடிக்கை யாளர் ஒருமாத காலத்தினுள் சமர்ப் பித்து ஒரு பவுண் தங்கச் சங்கிலி யைப் பெற்றுக்கொள்ளவும். சுதேசி கோழிப்பண்ணை, நாவலர் றோட், முள்ளியவளை. (5889)

# பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு வைப்புப் புத்தகம் வழங்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு கட்டம் கட்டமாக முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தினால் பத்தாயிரம் ரூபா பணம் வைப்பிலிட்ட புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகின்றதென முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் அ.மரியராசா தெரிவித்துள்ளார்.

இதன் ஒரு கட்டமாக கடந்த 12 ஆம் திகதி பத்தாயிரம் ரூபா பணம் வைப்பிலிடப்பட்ட புத்தகங் கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கருத்துரைகளை நெதர்லாந்தின் தமிழர் மனித உரி மைகள் மையக் கிளைப் பொறுப் பாளர் சின்னையா -இந்திரன், முல்லை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் வேழினி ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து தாய், தந்தையை இழந்த 63 சிறார்களுக் கான தமிழீழ வைப்பகத்தில் வைப் பிலிட்ட கணக்குப் புத்தகத்தினை நெதர்லாந்து தமிழர் மனித உரிமை கள் மையக் கிளைப் பொறுப்பாளர் சி. இந்திரன் வழங்கினார்.

ஏற்கனவே மூன்று கட்டமாக தாய், தந்தையை இழந்த பிள்ளைக ளுக்கான நிதி வழங்கப்பட்டது. (20)

# புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரியில் மாணவர்களுக்கான விசேடசெயலமர்வு

(முல்லைத்தீவு)

தமிழீழ மாணவர் அமைப்பின் அனுசரணையுடன் மொறட்டுவப் பல் கலைக்கழக மாணவர்களின் விசேட செயலமர்வு நிகழ்வு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இந் நிகழ்வு கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் பொதுச் சுடரினை முல்லை மாவட்ட தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் அறிவன்பன் ஏற்றினார்.

தமிழீழத் தேசியக்கொடியினை புதுக்குடியிருப்பு பிரதேசப் பொறுப்பா ளர் பிறையாளன் ஏற்றினார்.

அன்னை பூபதியின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அதிபர் சிவலிங்கம் ஏற்றி வைக்க, மலர் மாலையினை முல்லை மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் மயூரன் அணிவித்தார்.

தொடர்ந்து ஆசியுரையினை முல்லைவலயக் கல்விப்பணிப்பாளர் அரியரட்ணம் வழங்கினார்.

தொடர்ந்து தொழில்சார் மேம் படுத்தல் தொடர்பான செயலமர்வு மொறட்டுவப் பல்கலைக்கழக மாண வர்களினால் நடாத்தப்பட்டது. இதன் மூலம் புதுக்குடியிருப்புப் பிரதேச மாணவர்கள் பெரும் பயனடைந்துள் ளனர். (20)

# முள்ளியவளைப் பிரதேசத்தில் கட்டாக்காலிகள் தொல்லை

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேசத் தில் கட்டாக்காலிக் கால்நடைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படு கின்றது.

மேற்படி கால்நடைகள் இரவு வேளைகளில் குடியிருப்புப் பகுதி களில் நுழைந்து மக்களுக்கு தொல்லை கொடுத்து வருவதுடன் வீட்டுத் தோட்டங்களையும் நாச மாக்கி வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதுவிடயத்தில் சம்பந்தப்பட் டவர்கள் கவனம் செலுத்தவேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (ஆ)

# கேள்வி அறிவித்தல்


**கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு கீழ்வரும் மாதங்களுக்கு உலர் உணவு விநியோகம் மேற்கொள்ளத் தேவையான நாட்டுப் புழுங் கல் அரிசி, முதல் தரமான கோதுமை மாவு என்பன வழங் கக் கூடிய பதிவு செய்யப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களிடம் இருந்து மட்டும் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படு கின்றன.**

| மாதம் | நாட்டுப்புழுங்கல் அரிசி | கோதுமை மாவு |
|---|---|---|
| 2005 ஏப்பிரல் | 385 மெ.தொன் | 140மெ.தொன் |
| 2005 மே | 385 மெ.தொன் | 140மெ.தொன் |
| 2005 யூன் | 385 மெ.தொன் | 140மெ.தொன் |

*இதற்கான கேள்விப்பத்திரத்தையும், ஆவணங்களையும் 2005. 04. 25 வரை அலுவலக நேரத்தில் மாவட்ட புனர்வாழ்வுச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

**தி.இராசநாயகம்**
**அரசாங்க அதிபரும்**
**மாவட்ட கேள்விச் சபைத் தலைவரும்**
**கிளிநொச்சி மாவட்டம்.**

(சி.11775)




(5999)

# பணிநிலைக்கான வேண்டுகை

கிளிநொச்சி பாரதிபுரத்தில் இயங்கும் கல்வி தொழில் கல்வி அபிவிருத்தி நிறுவனத்திற்கு (ESDC) கீழ் வரும் பணிநிலைகளுக்கு புதிதாக ஆட்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். தகைமை உடையவர்கள் தங்கள் தன் வரலாறு அடங்கிய (சுயவிபரம்) வேண்டுகை, கல்விச்சான்றிதழ்கள், பிறப்புச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், ஏனைய சான்றிதழ்களுடன் நேர்முகத் தேர்வுக்கு நேரில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**பணிநிலைகள்**

01.நிர்வாக அலுவலர்
02.உணவு விநியோகஸ்தர் (பெண்)
03.உணவு விநியோகஸ்தர் (ஆண்)
04.பிரதான சிற்றூழியர்
05.கற்கை மண்டப பராமரிப்பாளர்
06.பராமரிப்பாளர்
07.மருத்துவ உதவியாளர்
08.பிரதான சமையலாளர்

**தகைமைகள்**

பணிநிலை:-01
க.பொ.த (உ/த) தேர்ச்சி அடைந்திருப்பதுடன் அரச/ அரச சார்பற்ற/ தனியார் நிறுவனங்களில் ஆகக்குறைந்தது 03 வருடங்கள் பணிபுரிந்த முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

பணிநிலை:-02,03
உணவு விநியோக வேலையில் ஆகக்குறைந்த 02 வருடங்கள் பணிபுரிந்த முன் அனுபவம் இருப்பதுடன் 40-56 அகவைக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

பணிநிலை:-04
ஆண்டு 10 கல்வி கற்றிருப்பதுடன் பணி முன் அனுபவத்துடன் 35-50 அகவைக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

பணிநிலை:-05,06
ஆண்டு 10 கல்வி கற்றிருப்பதுடன் பணி முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

பணிநிலை:-07
க.பொ.த (சா/த) தேர்ச்சி அடைந்திருப்பதுடன் பணி முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

பணிநிலை:-8 சமையல் வேலையில் ஆகக்குறைந்தது 03 வருடங்கள் வேலை செய்த முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள்:-
21.04.2005 வியாழக்கிழமை காலை 10.00 மணி
இடம்:-தமிழர் புனர்வாழ்வுக்கழகம்
நடுவப்பணியகம் (கந்தசாமி கோவில் அருகாமை)
கிளிநொச்சி

**ஆளணி நிர்வாகப் பகுதி,**
**தமிழர் புனர்வாழ்வுக்கழகம்,**
**நடுவப்பணியகம்,**
**கிளிநொச்சி.**

(சி.11641)



காபூல் விமானத்தளத்தில் நடைபெற்ற நினைவு நிகழ்வொன்றில் வானத்தை நோக்கித் துப்பாக்கிவேட்டு நடத்தும் அமெரிக்கப் படையினர்.

# ஈராக்கில் தொடரும் தற்கொலைத் தாக்குதல்கள்

# 15 பேர் பலி; 20 இற்கு மேற்பட்டோர் படுகாயம்

(பாக்தாத்)

**ஈராக் தலைநகரிலுள்ள அரசாங்க அலுவலகத்தில் இடம்பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில் 15 பேர் பலியானார்கள். 20 பேர் படுகாயம் அடைந்தனர். இந்தச் சம்பவத்தில் 15 கார்களும் பலத்த சேதத்துக்கு உள்ளாகின.**

ஈராக்கின் இடைக்கால அரசுக்கும், அமெரிக்காவுக்கும் எதிராக தீவிரவாதிகள் குண்டுத் தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள். இந்தத் தாக்குதல் தற்போது அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் காலையில் தலைநகர் பாக்தாத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ள அரசாங்க அலுவலக வளாகப் பகுதியில் அடுத்தடுத்து இரண்டு கார்க்குண்டுகள் வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கார்க் குண்டுத் தாக்குதலில் 15 பேர் அதே இடத்தில் பலியானார்கள். 20இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர். இவர்கள் அனைவரும் மீட்கப்பட்டு பல்வேறு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 15 கார்களும் சேதமடைந்தன. குண்டு வெடித்த இடம் நகரின் மையப் பகுதி என்பதால் போக்குவரத்துத் தடைபட்டதாக பக்தாத் செய்திகள் தெரிவிக்கின்றன.

## முஷாரப்—ரம்ஸ்பீல்ட் சந்தித்துப் பேச்சு

(இஸ்லாமபாத்)

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட், பாகிஸ்தான் அதிபர் முஷாரப் இருவரும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

தீவிரவாதத்துக்கு எதிரான போர், நல்லுறவு, இந்தியா - பாகிஸ்தான் சமரசப் பேச்சு உட்படப் பல்வேறு பிரச்சினைகள் குறித்து இருவரும் ஆலோசனை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா போர் விமானங்கள் வழங்குவது பற்றியும் இருவரும் பேச்சு நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பாக்.அதிபர் முஷாரப் இன்று இந்தியா பயணம்

பாகிஸ்தான் அதிபர் முஷாரப் இந்தியாவில் மூன்று நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இன்று தனி விமானம் மூலம் இந்தியா செல்கிறார். இந்தியா செல்லும் முஷாரப், பிரதமர் மன் மோகன் சிங்கைச் சந்தித்து இரு நாட்டு பிரச்சினைகள் குறித்து பேச்சு நடத்தவுள்ளார். இதனையடுத்து நாளை டில்லியில் நடை பெறும் இந்தியா பாகிஸ்தான் ஒருநாள் கிரிக்கெட் போட்டியை முஷாரப்பும், பிரதமர் மன்மோகன்சிங்கும் பார்வையிடுவர். காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, முன்னாள் பிரதமர் வாஜ்பாய் உள்ளிட்ட தலைவர்களும் அவர்களுடன் அமர்ந்து போட்டியை பார்ப்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.



இங்கிலாந்து இளவரசர் சார்லஸ் அவரது காதலி கமீலா திருமணம் கடந்த 9 ஆம் திகதி நடந்தது. அவர்கள் இருவரும் ஜோடியாக அபர்டீன்ஷை பகுதியில விளையாட்டு மைதான திறப்பு விழாவில் கலந்து கொண்டனர். திருமணத்துக்குப பிறகு அவர்கள் கலந்து கொண்ட முதல் பொது நிகழ்ச்சி இதுதான். அப்போது கடுமையான வெயில் அடித்ததால் கமீலாவும், சார்லசும் குடை பிடித்தபடி வந்தனர்.

# போப்பின் கல்லறையை பார்வையிட பொதுமக்களுக்கு அனுமதி

(வத்திக்கான்)

போப்பாண்டவர் இரண்டாம் ஜோன் போல் அடக்கம் செய்யப்பட்ட கல்லறைக்கு அஞ்சலி செலுத்த பொது மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மரணம் அடைந்த போப்பாண்டவர் இரண்டாம் ஜோன்போலின் உடல் வத்திக்கான் நகரில் உள்ள தேவாலய பாதாள அறையில் கடந்த எட்டாம் திகதி நல்லடக்கம் செய்யப்பட்டது. பின்னர் அந்தக் கல்லறை உள்ள பாதாள அறை மூடப்பட்டது. இந்த நிலையில் அந்தக் கல்லறையைப் பார்க்கவும், அஞ்சலி செலுத்தவும் உலகம் முழுவதிலும் இருந்து ஆயிரக் கணக்கானவர்கள் ரோம் வந்து குவிந்தனர்.

இதனைத் தொடர்ந்து பொதுமக்கள் போப்பாண்டவரின் கல்லறையைப் பார்க்க அனுமதி அளிக்கப்பட்டது. முதலில் கர்தினால்கள் மண்டியிட்டு பிரார்த்தனை நடத்தினார்கள்.

அதன் பின் பாதாள அறை திறக்கப்பட்டு பொதுமக்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டார்கள். வரிசையாகச் சென்று அஞ்சலி செலுத்தினார்கள். பலர், மலர்க் கொத்துகளை எடுத்து சென்று அஞ்சலி செலுத்தினர்.

கல்லறை திறக்கப்பட்ட தகவல் கிடைத்ததும் நீண்ட வரிசையில் லட்சக்கணக்கானவர்கள் பல மணி நேரம் காத்து நின்று அஞ்சலி செலுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஐ.நாவின் சிறப்புத் தூதராக முன்னாள் சனாதிபதி கிளின்டன்

சுனாமி நிவாரண நிதி வழங்கும் ஐ.நா சபையின் சிறப்புத் தூதராக அமெரிக்க முன்னாள் சனாதிபதி பில் கிளின்டன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட 'சுனாமி' பேரலையால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு நிவாரண உதவிகள் வழங்க ஐ.நா சபை தீவிர முயற்சி எடுத்து வருகிறது. இதற்கான ஐ.நா சபையின் சிறப்புத் தூதராக அமெரிக்க முன்னாள் சனாதிபதி பில்கிளின்டன் நியமிக்கப்பட்டார். இதனை ஐ.நா பொதுச்செயலாளர் கொபி அனான் தெரிவித்தார். கொபி அனானின் கோரிக்கையை ஏற்று இப் பொறுப்பை ஏற்க கிளின்டன் சம்மதம் தெரிவித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.



புதிய பாப்பரசர் ஒருவரை நாளை மறுதினம் தெரிவு செய்யவிருக்கும் நிலையில் வத்திக்கானில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றுக்கு வருகை தந்த கர்தினால் அஞ்சேலோ சோடனோ.

# உல்லாச விடுதியில் தீ விபத்து பிரான்ஸில் 20 பேர் பலி; பலர் படுகாயம்

(பரிஸ்)

பிரான்ஸின் தலைநகர் பரிசில் உல்லாச விடுதியில் ஒன்றில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் இருபது பேர்தீயில் கருகி உயிரிழந்துள்ளனர் ஐம்பதிற்கும் அதிகமானோர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பன்னிரண்டு போர் ஆபத்தான நிலையில் உள்ளதாக மருத்துவமனைத் தகவல்கள் கூறுகின்றன. உல்லாச விடுதியில் ஆறாவது மாடியிலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டது. இதன் போது உயிர்தப்புவதற்காக யன்னலூடாகப் பலர் வெளியே குதித்தாக தீயணைப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இந்தத் தீயை அணைக்க தீயணைப்புப்படையினர் நீண்ட நேரம் போராடினர். தீவிபத்து எப்படி ஏற்பட்டதென இதுவரை தெரியவில்லையெனவும் கூறப்படுகின்றது.

## விமானத்தில் போதைப் பொருள் விமான ஓட்டி கைது

(நியூயோர்க்)

அமெரிக்க சரக்கு விமானத்தில் இரகசியமாகப் போதைப் பொருள் கடத்தப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதனையொட்டி விமானி பிராங்ளின் ரோட்ரிக்ஸ் மற்றும் சரக்குப் பிரிவுப் பொறுப்பாளர் ஜான் போவ் ஆகியோர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இவர்கள் மீது நீதிமன்றில் வழக்குத் தொரடப்பட்டுள்ளது. குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் 20 ஆண்டு சிறைத் தண்டனையும் ரூபா ஐந்து கோடி அபாராதமும் விதிக்கப்படும் என அமெரிக்க அரசு அறிவித்துள்ளது.



சியோலிலுள்ள ஜப்பானியத் தூதரகத்தின் முன்னால் ஜப்பானுக்கு எதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது பிரதமர் யுனிஷிரோ கொயிசுமியின் கொடும்பாவி வைக்கப்பட்ட பேழை

# சுகியை விடுதலை செய்யக்கோரி 6000 வாழ்த்து அட்டைகள்

(றங்கூன்)



மியாமரில் வீட்டுக் காவலில் இருக்கும் ஆன்சான் சுகியை விடுவிக்கக்கோரி புதுவகை போராட்டம் ஒன்றை அமெரிக்க மனித உரிமைகள் அமைப்பு ஆரம்பித்துள்ளது. மியான்மரில் (பர்மா) சனநாயக மீட்பு இயக்கம் என்ற தலைவி ஆன்சான் சுகி தொடங்கினார். தேர்தலில் வெற்றி பெற்ற போதும் அவரை ஆட்சி அமைக்க இராணுவ அரசு அனுமதிக்கவில்லை. ஆன்சான் சுகியை இராணுவ அரசு கைது செய்து பல ஆண்டுகளாக வீட்டுக்காவலில் சிறை வைத்துள்ளது. அவரை விடுதலை செய்யும்படி அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகள் வற்புறுத்தியும் மியான்மர் ராணுவ அரசு செவிசாய்க்கவில்லை. சிறை வைக்கப்பட்டுள்ள ஆன்சான்சுகி நோபல் பரிசு பெற்றவர்.

வரும் ஜூன் மாதம் 19 ஆம் திகதி அவரது 60 ஆவது பிறந்த நாள் விழாவில் அவரை விடுதலை செய்ய வற்புறுத்தி அமெரிக்காவிலுள்ள ஒரு மனித உரிமை இயக்கம் நூதனப் போராட்டம் நடத்துகிறது. வீட்டுக்காவலில் இருக்கும் ஆன்சான்சுகிக்கு உலகம் முழுவதுமுள்ள முக்கிய பிரமுகர்களிடம் இருந்து 6000 வாழ்த்து அட்டைகளை அந்த இயக்கம் அனுப்ப ஏற்பாடு செய்துள்ளது.. அதில் மியான்மர் அரசை விடுதலை செய்யக்கோரும் வாசகங்களும் இடம் பெற்றிருக்கின்றது.

# வவு. இல் வீதிச்சிறுவர்கள் அதிகரிப்பு


# பொது அமைப்புக்கள் கவலை

(வவுனியா)

**வவுனியாவில் அண்மை நாட்களாக வீதிச் சிறுவர்கள் ,சிறுவயதுத் தொழிலாளர்கள் அதிகரித்து இருப்பதாக பொது அமைப்புக்கள் கவலை தெரிவிக்கின்றன.**

இந்தச் சிறுவர்களை உடன் நிறுத்தி கல்வியில் கவனம் செலுத்தாத பட்சத்தில் எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைகளினை எதிர்நோக்க வேண்டிவரும் என்றும், சமூகத்தில் ஆர்வம் கொண்டவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

போர் காரணமாக இடம் பெயர்ந்து தொடர்ந்தும் நலன்புரிநிலையங்களில் வாழ்ந்து வரும் சிறுவர்களே இவ்வாறு அதிகளவில் வீதிச் சிறுவர்களாவும், சிறுவயதுத் தொழிலாளர்களாகவும் பயன்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. வீதிகளில் இருக்கும் இரும்புகளைச் சேர்ப்பது, போத்தல்கள் சேர்ப்பது, நடைபாதை வியாபாரம், அப்பிள் வியாபாரம், கடையில் எடுபிடிவேலை போன்றவற்றில் இந்தச் சிறுவர்கள் பெருமளவாக ஈடுபடுத்தப்பட்டு வருகின்றார்கள். அவ்வாறு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டு வருபவர்களுக்குப் போதிய அளவு சம்பளம் வழங்கப்படுவதில்லை, எதிர்காலத்தினைப்பற்றி எந்த விதமான திட்டங்களும் எடுக்கப்படுவதில்லை. இவ்வாறு வருகின்ற சிறுவர்கள் பிழையான வழியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். சிறுவர்களிடம் கேட்டால் குடும்பத்தின் நிலை காரணமாகவே தாம் இவ்வாறு வேலைகள் செய்வதாகத் தெரிவிக்கின்றனர். சிறுவயதுத் தொழிலாளர் சட்டத்திற்கு விரோதமானது என்பதால் கடைகளில வரும் நபர்கள் யாரும் வயதைக கேட்டால் 18 வயது என்று கூறுமாறு தெரிவிக்கப்பட்டு இருப்பதாகவும் அந்தச் சிறுவர்கள் தெரிவிக்கின்றார்கள். (21)



புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரியில் முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிமனையின் முறைசாராக்கல்விப் பிரிவினரால் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி நெறி இவ்வாண்டு முதல் நடாத்தப்பட்டு வருகின்றது. கடந்த ஒன்பதாம் திகதி சனிக்கிழமை இப்பயிற்சி மாணவர்களுக்கான வீதிப்போக்குவரத்து சம்பந்தமான விசேட அறிவுறுத்தல் கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டது. இப்பாடநெறியின் போதனாசிரியரான பி. மில்ரன தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் புதுக்குடியிருப்பு வாகனப் போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பாளர் சி. பிரதீப்குமார கலந்து கொண்டு சாரத்தியமும், வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்கான நடைமுறைகளும் என்ற தலைப்பில் அறிவுறுத்தல்களை வழங்கினார். (படம்-சோதி, தவரட்ணம்)

## ஆரம்பவிழா

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கண்டாவளை மகா வித்தியாலய சிறுவர் பூங்கா ஆரம்ப விழா இன்று காலை 9.00 மணிக்கு வித்தியாலய வளாகத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய முதல்வர் சி.சிறீதரன் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் கிளி.மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு விழாவினை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

மேற்படி நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கண்டாவளைப் பிரதேச பொது அமைப்புக்களும், பாடசாலை சமூகத்தினரும் கேட்டுக்கொண்டுள்ளனர்.(சோ)

### – திருகோணமலையில் –

## கடற்கோளினால் கணவனை இழந்தவர்களுக்கு தையல் இயந்திரம் கையளிப்பு

லண்டனிலுள்ள சஸ்ரெயின் நிறுவனத்தின் அனுசரணையுடன் மூதூர் கிழக்கு பெண்கள் மேம்பாட்டு நிறுவனம் ஊடாக திருகோணமலை மாவட்ட பொருண்மிய மதியுரையகம் (டெக்) கடற்கோளினால் பாதிக்கப்பட்டு விதவைகளான பெண்களின் சுயபொருளாதார அபிவிருத்திக்கென்று பத்து தையல இயந்திரங்களைக் கையளித்தது. இந்த நிகழ்வு சம்பூர் மீனவர் சங்கக்கட்டடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி . காருண்யா பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தையல் இயந்திரம் கையளித்தார். பொருண்மிய மதியுரையகத்தின் திருமலை மாவட்டத்தின் பொறுப்பாளர் எஸ்.ஸ்ரீதரன், இணைப்பாளர் ந.கலையரசன் மற்றும் பலர் நிகழ்வில் பங்குபற்றினர்.

### -முல்லையில்-

## ஆழிப்பேரலையால் ஆவணங்களை இழந்தோருக்கு நடமாடும் சேவை

சுனாமியால் பாதிக்கப்பட்டு ஆவணங்களையிழந்த முல்லைத்தீவு மக்களுக்கான நடமாடும்சேவை எதிர்வரும் மே மாதம் ஆரம்பமாகவுள்ளது.

இதனடிப்படையில் மேமாதம் ஆறாம் , ஏழாம், எட்டாம் திகதிகளில் முல்லைத்தீவு, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு ஆகிய மூன்று இடங்களிலும் நடைபெறவுள்ளதாக முல்லை. மாவட்ட அரசஅதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இவற்றில் பிறப்பு, இறப்பு பதிவுச் சான்றிதழ், மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம், தேசிய அடையாள அட்டைகள் போன்ற சேவைகள் வழங்கப்படவுள்ளதால் இப்பதிவுகளுக்குத் தேவையான பிறப்பு, இறப்பு திருமணப்பதிவுகளின் மூலப் பிரதிகளை முல்லை.மாவட்ட அரசஅதிபர் செயலகத்திலுள்ள பிறப்பு, இறப்பு அத்தாட்சிச் செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் இதனடிப்படி 1940 ஆம் ஆண்டு தொடக்கம் 2005 வரைவுள்ள பதிவுகளின் மூலப்பிரதிகளைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (20)

## மன்னாரில் விசேட மருத்துவ முகாம்

மன்னார் ஐ.ஓ.எம் நிறுவனத்தின் அனுசரணையுடன் கடந்த திங்கட்கிழமை மன்னார் கறுக்காய்க்குளம் தியாகதீபம் திலீபன் மருத்துவசேவை நிலையத்தினால் ஓர் விசேட மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் காது, மூக்கு, தொண்டைசிகிச்சை நிபுணர், கண்சிகிச்சை நிபுணர், தோல்சிகிச்சை நிபுணர் உள்ளடங்கலான குழுவினர் சிகிச்சையினை வழங்கியிருந்தனர்.

இச்சிகிச்சையில் குறிப்பாக கண் சம்பந்தமாகவே 187 பேர் சிகிச்சை பெற்றனர். இவர்களுள் 97 பேருக்கு உடன் மூக்குக்கண்ணாடி வழங்கப்பட்டன. மேலும் இச்சிகிச்சை மூலம் மொத்தமாக 484பேர் பயன்பெற்றுள்ளனர். பயனடைந்தவர்களுள் பெருமளவானோர் இந்தியாவில் இருந்து மீள நாடு திரும்பியோர் என்பது குறிப்பிடத்தக்கது.


## புதிய கட்டடத் திறப்பு விழா

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கனகபுரத்தில் அமைந்துள்ளஒப்ரெக் (OBTCE) நிறுவனத்தின் கணினிப்பயிற்சி நிலைய புதியகட்டடத்திறப்பு விழாவும், கணினிப் பயிற்சியினை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்றுக்காலை 10.00 மணிக்கு நடைபெற்றது.

அமல மரித்தியாகிகள் சபையின் வடமாகாண முதல்வர் அருட்திரு ஜீவேந்திராபோல் அடிகள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மங்கல விளக்கேற்றலினைத் தொடர்ந்து புதிய கட்டட கல்வெட்டினை தமிழீழ அரசியல்துறைத்துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் திரைநீக்கம் செய்துவைக்க, கணினிப் பயிற்சி நிலையக் கட்டடத்தினை தமிழீழ அரசியல்துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி. தமிழினி சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்துவைத்தார். அடுத்து பயிற்சி நிலையக் கணினியினை அருட்திரு. ஜீவேந்திராபோல் அடிகள் மின்விசையினை அழுத்தி ஆரம்பித்து வைத்தார். தலைமையுரையினை அடுத்து வரவேற்புரையினை உளவளத்துணை நிலைய இயக்குநர் அருட்திருறெஜினோட் அடிகள் நிகழ்த்தினார். தலைமையுரையினைத் தொடர்ந்து சிறப்புரையினை நவம் அறிவுக் கூடப் பொறுப்பாளர் கலைக்கோன் நிகழ்த்தினார். தொடர்ந்து கணினிப்பயிற்சி நெறியை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்களை தமிழீழ அரசியல் துறை துணைப்பொறுப்பாளர், தமிழீழ அரசியல்துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் மற்றும் அருட்திரு ஜீவேந்திராபோல் அடிகள் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.

நிகழ்வில் தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன், வெற்றிமனைப் பொறுப்பாளர் மித்திரா, ஒப்ரெக் நிறுவன இயக்குநர் அருட்திரு ஜெயபாலன் அடிகள், கிளி. முல்லை. மறைக்கோட்ட குரு முதல்வர் தேவசகாயம் அடிகள், பெண்கள் தொழில நுட்ப நிறுவனப் பொறுப்பாளர் சோபனா, மற்றும் மாவட்ட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதி நிகழ்வாக ஒப்ரெக் நிறுவன வளாகத்தில் ஆங்கிலக்கற்றை நெறி புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லினை தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் நாட்டிவைத்தார். (சோ)



(படங்கள்-சோதி)

## குச்சவெளி மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைப்பு

(திருமலை)

சுனாமிப்பேரலைகளின் தாக்கத்தினால் தமது வீடுகளை இழந்து நிர்க்கதியான நிலையில் தற்காலிகக் கூடாரங்களிலும், உறவினர் மற்றும் நண்பர்களின் இல்லங்களிலும் வாழும் குச்சவெளி மக்களிற்கு நிரந்தர வீடுகள் அமைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கடல் எல்லையிலிருந்து 200 மீற்றர் தூரத்திற்குள் வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு கும்புறுபிட்டி கிராமத்தில் அரச காணியில் நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாவட்ட செயலக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சுனமி இடம்பெற்று நான்கு மாத காலமான நிலையிலும் இத்தகைய குடும்பங்கள் கடும் வெய்யிலினாலும், பருவம் தப்பிய மழையினாலும் பெரும் துன்பங்களையும், துயரங்களையும் அனுபவித்து வருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

## பூநகரியில் வெதுப்பகப் பொருட்கள் உற்பத்திப் பயிற்சி நெறி

ஐ.எல்.ஒநிறுவன நிதியுதவியுடன் பொருண்மிய மதியுரையகத்தால் நடைமுறைப்படுத்தப்படும் நவீன தொழில்நுட்பங்களுடனான வெதுப்பகப் பொருட்கள் உற்பத்திக்கான பயிற்சியும் வருமான அதிகரிப்புத் திட்டமும் ஆரம்பமாகியது.

மேற்படித் திட்டத்திற்கான பயிற்சி வகுப்புக்கள் பூநகரி பரமன்கிராயில் கடந்த 10 ஆம் திகதி வெதுப்பக வளாகத்தில் கிளிநொச்சி மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தின் வெளிக்கள அலுவலர் அ.சிவலிங்கம் தலைமையில் ஆரம்பமாகியது.

இத்திட்டத்திற்கு பாடசாலையில் இருந்து இடைவிலகிய 14-18 வயதிற்குட்பட்ட 10 பயனாளிகளும், பெண்களைக் குடும்பத்தலைவர்களாகக்கொண்ட பெண்கள் 10 பேரும உள்ளடங்கலாக 20 பேர் உள்வாங்கப்பட்டுள்ளனர். இத்திட்ட ஆரம்ப பயிற்சி நாளில் இத்திட்டம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட பொருண்மிய மதியுரையக இணைப்பாளர் சி.விஜேந்திரா அவர்களும், ஐ.எல்.ஒ நிறுவன கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ஜோசப் அவர்களும் விளக்கம் அளித்ததைத் தொடர்ந்து இப்பயிற்சிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இக்கிராமத்தின் இம் முன்னோடித் திட்ட ஆரம்ப நிகழ்வில் பொருண்மிய மதியுரையக இணைப்பாளர் ஐஎல்ஒ நிறுவன இணைப்பாளர் மற்றும் பூநகரிப் பிரதேச செயலாளர், தென்இலங்கையைச் சேர்ந்த பயிற்றுவிப்பாளர்கள், கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர், செயலாளர் மற்றும் கிராம நலன்விரும்பிகள், கிராமமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

### செயற்கைமுறைச் சினைப்படுத்தல் சேவை

செயற்கை முறைச் சினைப்படுத்தல் சேவையை விஸ்தரிப்புச் செய்யும் நோக்குடன் பரந்தன் பகுதியில் அமைந்துள்ள கிளிநொச்சி மாவட்ட கமக்கார அமைப்பு பணிமனையிலும், விசுவமடுப் பகுதியில் பசுமை வேளாண் பகுதியிலும் தொடர்புகளை மேற்கொள்வதுடன் சிறுசிகிச்சையினையும் பெற்றுக்கொள்ள முடியுமென காராளி செயற்கை முறைச் சினைப்படுத்தல் சேவைநிலைய முகாமையாளர் தெரிவித்துள்ளார். (05)

# தென்மராட்சி கரையோரப் பகுதி மக்கள்; படையினரால் தொடர்ந்தும் அவல வாழ்க்கை

(தென்மராட்சி)

**அதிஉயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் தென்மாரட்சிப் பகுதியில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள கரையோரப்பகுதி மக்கள் தொடர்ந்தும் நெருக்கடி நிலையில் அவல வாழ்வு வாழ்கின்றனர்.**

படையினரின் இந்த ஆக்கிரமிப்புக்கு எதிராக உண்ணாவிரதங்கள் மறியல் போராட்டங்கள் எனப் பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளில் பொது மக்கள் ஈடுபட்டு வருகின்ற போதும் படையினர் மக்களின் கோரிக்கைக்கு செவிமடுப்பதாக இல்லை. சில இடங்களில் இருந்து மட்டும் படையினர் வெளியேறியுள்ளனர்.

ஆனாலும் மக்கள் குடியிருப்புகளில் இருந்து வெளியேறும் படையினர் அங்கிருக்கும் வீடுகளின் கூரைகள், கதவுகள் என வெகுமதியானவற்றை சூறையாடிச் செல்கின்றனர். இதனால் அப்பகுதியில் மீளக் குடியேறும் சிறுபகுதியினருக்குக் கூட வீடுகளின் வெறும் கற்சுவர்களே எஞ்சு கின்றன.

அங்கு மீளச் செல்லும் மக்கள் தற்காலிக அமைப்புகளை செய்தும் எஞ்சியுள்ள பகுதிகளில் திருத்தங்களை செய்தும் வாழ முற்படுகின்றனர். இதுவரை அரசினது எந்தவொரு உதவிகளும் கிட்டியிராத நிலையில் அவர்களது அவலவாழ்வு தொடர்கிறது.

குறிப்பாக சாவகச்சேரி நகரை அண்டிய கடல் நீரேரிப் பகுதியையும் கடற்கரையினையும் பொதுமக்களது பாவனைக்கு தொடர்ந்தும் படைத்தரப்பு அனுமதி மறுத்து வருகின்றது. ஆனாலும் படையினரின் உயர் பாதுகாப்பு வலயத்தை அண்டிய முட்கம்பி வேலிகளுடன் அண்மித்ததாக மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் பெரும் நெருககடிகளைச் சந்திக்கின்றனர். (27)

# கேரதீவு கடற்பரப்பில் சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதிக்குக!

## தென்மராட்சி கடற்றொழிலாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கேரதீவுக்கடற்பரப்பில் 24 மணி நேரமும் சுதந்திரமான முறையில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட சிறிலங்காக் கடற்படையினர் அனுமதியளிக்க வேண்டுமென தென்மராட்சிப் பிரதேச கடற்றொழிலாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கேரதீவுக்கடற்பரப்பில் தென்மராட்சி மீனவர்களைச் சுதந்திரமாகக் கடற்றொழிலில் ஈடுபட அனுமதிக்காது அனுமதிப்பத்திர நடைமுறை, பாதுகாப்பு வலய நடைமுறை, நேரக்கட்டுப்பாட்டு நடைமுறை எனப் பல் வேறுபட்ட பாதுகாப்புக் கெடுபிடிகளையும் படையினர் அமுல்படுத்தி வைத்துள்ளனர்.இதனால் தமது கடற்றொழில் நடவடிக்கைகளும் பொருளாதார முன்னேற்றங்களும் பாதிக்கப்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டியே இக்கோரிக்கையை கடற்றொழிலாளர் விடுத்துள்ளனர். (33)

# சட்ட விரோதமாகப் பனை மரங்கள் தறிப்பு; பொலிசார் நடவடிக்கை எடுப்பதில்லை

## –பனை,தென்னைவள அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் சட்டவிரோதமான முறையில் பனை மரங்களைத் தறித்தழிக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றபோதும் இது குறித்து சிறிலங்காப் பொலிசார் கவனம் செலத்துவதில்லை என பனை தென்னைவள அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் குற்றம் சாட்டி வருகின்றது.

யாழ்குடாநாட்டில் இராணுவப் பாதுகாப்பு வலய கெடுபிடிகள் மற்றும் இராணுவ நெருக்குவாரங்கள் காரணமாக பொதுமக்கள் மீளக்குடியமரச் சென்றிராத பிரதேசங்களில் இத்தகைய சட்டவிரோத பனைமரத்தறிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன.. இதனால் யாழ் குடாநாட்டைச் சேர்ந்த சுமார் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பனைவளத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் சுட்டிக்காட்டியுள்ளது. (33)

# வரணி இராணுவ முகாமை பலப்படுத்தும் பணி தீவிரம்

யாழ். தென்மராட்சியில் உள்ள வரணி இராணுவ முகாமைப்பலப்படுத்தும் நடவடிக்கைகளில் சிறிலங்காப்படையினர் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக இம் முகாமினைச் சூழ புதிய காவலரண்களை நிறுவி வரும் படையினர் முட்கம்பி வேலிகளையும் பலப்படுத்தி வருகின்றனர். அத்துடன் இம் முகாமில் புதிதாக ஏராளமான படையினர் கொண்டு வந்து குவிக்கப்பட்டுக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.இதனால் இப்பகுதி மக்களிடையே பெரும் பீதி நிலவி வருகின்றது. (33)

# யாழ்.குடாநாட்டில் பரவலாக மிதிவெடி அபாய விழிப்புணர்வு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் பலபகுதிகளிலும் மிதிவெடி அபாயம் குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் மற்றும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் என்பன இணைந்து ஈடுபட்டு வருகின்றன.

புன்னாலைக்கட்டுவன், ஏழாலை, வளலாய், தெல்லிப்பழை, மாதகல், ஊர்காவற்றுறை, புங்குடுதீவு போன்ற இடங்களில் உள்ள இராணுவ அதிஉயர்பாதுகாப்பு வலயங்களை அண்மித்துள்ள பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ளோர்களிடையே மிதிவெடி அபாயம்குறித்த விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் நடவடிக்கையில் இவ்வமைப்புக்கள் ஈடுபட்டுள்ளன.

அத்துடன் மேற்படி பிரதேசங்களில் ஏற்கனவே மிதி வெடிவிபத்தினால் பாதிக்கப்பட்டு அவயவங்களை இழந்தோருக்கு இந்நிறுவனங்களால் புனர்வாழ்வு உதவிகளும் வழங்கப்படுகின்றன. (33)

# பொலிஸ் நிலையங்களிலேயே பெண் உரிமை மீறல்கள்!

## –பெண் உரிமைபேணும் அமைப்புக்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பொலிஸ் நிலையங்களிலேயே பெண் உரிமை மீறல்கள் இடம்பெற்று வருவதாக யாழ்மாவட்டத்திலுள்ள பெண் உரிமை பேணும் அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

யாழ்.குடாநாட்டில் உள்ள சிறிலங்கா பொலிஸ் நிலையங்களில் மிகக்குறைந்தளவே பெண்பொலிசார் கடமையாற்றுகின்றன. அவ்வாறு கடமையாற்றும் பெண் பொலிசாருக்கும் தமிழ் மொழிதெரியாது.

எனவே பெண்கள் சம்பந்தப்பட்ட விசாரணைகளிலும் பதிவு நடவடிக்கைகளிலும் ஆண் பொலிசாரே ஈடுபடுகின்றனர். இதனால் பாதிக்கப்பட்ட பெண்கள் மேலும் பாதிக்கப்படுவதுடன் தமது வழக்குகளை கைவிட வேண்டிய நிலைக்கும் தள்ளப்படுகின்றனர் என பெண் உரிமை பேணும் அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன. (33)

# வீதியால் சென்றவர் தாக்குதலில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வீதியால் சென்று கொண்டிருந்த நபர் ஒருவர் மீது வீதியோரப் பற்றைக்குள் பதுங்கியிருந்த கும்பல் ஒன்று நடத்திய திடீர்த் தாக்குதலில் வீதியால் பயணித்தவர் படுகாயமடைந்துள்ளார்.

கடந்த புதன்கிழமை இரவு 10 மணியளவில் யாழ் ஏழாலைப் பகுதியில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த க. மகாதேவன் (வயது-42) என்பவர் காயமடைந்தநிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (33)

# பொன்னாலையிலிருந்து இடம்பெயர்ந்தோருக்கு யு.என்.எச்.சி.ஆர். நூறு வீடுகள் அமைப்பு

(பொன்னாலை)

யாழ்.வலிகாமம் பொன்னாலைப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்காக ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் ஏற்பாட்டில் நூறு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டவுள்ளன.

இந்நூறு வீடுகளும் இப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து யுத்த நிறுத்த ஒப்பந்ததின் பின்னரும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாத நிலையில் வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கு வழங்கப்படவிருப்பதுடன்.இராணுவ கெடுபிடிகள் காரணமாக இப்பகுதியில் உள்ள இராணுவ அதி உயர்பாதுகாப்பு வலயத்தை அண்டியுள்ள பகுதிகளில் மீளக் குடியமர முடியாதுள்ள நிலையில் தற்காலிக வாழ்விடங்களில் வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கும் வழங்கப்படவுள்ளன. (33)

# கந்தபுரத்தில் பொது நூலகம் நேற்றுதிறந்து வைக்கப்பட்டது

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் அக்கராயன் பிரதேசத்திற்கான பொதுநூலகம் கந்தபுரத்தில் வைபவரீதியாக நேற்று திறந்து வைக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் இதனைத் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வு பொதுச்சுடரேற்றலுடன் ஆரம்பமானது. தமிழீழ தேசியக் கொடியினை அக்கராயன் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் திருமாறன ஏற்றிவைத்தார். அடுத்து கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக் கொடியினை அதன் விசேட ஆணையாளர் பொன் நித்தியானந்தம் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து பொது நூலகத்திற்கான பெயர்ப்பலகையினை அக்கராயன் மகாவித்தியாலய அதிபர் குகானந்தராசா திரைநீக்கம் செய்துவைத்தார்.

அடுத்து புதிய நூலகத்தினை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி. இராசநாயகம் நாடாவினை வெட்டித் திறந்துவைத்தார்.

இங்கு ஆசியுரையினை பேரம்பலவானேஸ்வரக் குருக்கள் வழங்கினார். தொடர்ந்து சிறப்புரைகளை பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் திருமாறன், அக்கராயன் பிரதேச சமாதான நீதவான் கிறிஸ்ணபிள்ளை, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செல்வி உஷா ஆகியோர் நிகழ்த்தினாகள்.

பிரதம விருந்தினர் உரையினை அரசாங்க அதிபர் தி. இராசநாயகம் நிகழ்த்தினார்.

இந்தப் பொதுநூலக திறப்பு விழாவில் பிரதேச பொதுமக்கள், அரச, அரசசார்பற்ற நிறுவன ஊழியர்கள், பிரதேச திட்டக்குழு உறுப்பினர்கள், மாதர்சங்கஉறுப்பினர்கள் போராளிக்ள் எனப் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (கு)



# "சூசகன" கடன்திட்டத்தில் முல்லை. மாவட்டம் புறக்கணிப்பு

(முல்லைத்தீவு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறு மற்றும் மத்தியதர தொழில் துறையினரை மீளக் கட்டியெழும்பும் நோக்குடன் மக்கள் வங்கியினால் "சூசகன" என்ற கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட போதும் இதுவரை முல்லைத் தீவுப் பகுதியில்பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்தக் கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்படவில்லை என முல்லைத்தீவு மாவட்ட சிறு மற்றும் மத்தியதரத் தொழில்துறையினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

முல்லை மாவட்டத்தில் இதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு மூன்று மாதங்கள் கடந்து விட்ட நிலையிலும் இப்பிரதேசத்திற்கு இக்கடன் திட்டம் இதுவரை அமுல் படுத்தப்படவில்லை.ஆனால் தென்பகுதிகளில் சுனாமி பாதித்த பிரதேசங்களில் இத்திட்டங்களுக்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் பூர்த்தியாகியுள்ளன.எனவே மிகவும் பாதிக்கப்பட்ட இப்பகுதியில் இவ்வாறான உதவிகள் உடனடியாகக் கிடைப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்டுள்ள சிறு, மற்றும் மத்திய தரக் கைத் தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (20)

# செம்மலையில் சூழல் மாசடைதலை தடுக்க உடனடி நடவழக்கை

செம்மலைக் கிராமத்தில் உவர்மண் புழுதியினால் சூழல் மாசடைவதைத் தடுப்பதற்கான உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் புழுதியின் காரணமாக சூழல் மாசடைதல் தொடர்பாக அப்பகுதி மக்களினால் முல்லை. மாவட்ட அரச அதிபருக்கு மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. இந்த மகஜரில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த முந்நூற்றுக்கும் மேற்பட்டோர் கையொப்பமிட்டிருந்தனர்.இந்த மகஜர் கையளிப்பினைத் தொடர்ந்து இதனைத் தடுப்பதற்கான ஆரம்பகட்ட மதிப்பீடு தற்போது முல்லை. அரச அதிபரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (20)

# பாத்தீனியம்-ஆக்கிரமித்து வளரும் ஆபத்தான தாவரம்



இத்தாவரம் சூரியகாந்தி குடும்பத்தைச் [அஸ்ரறேசியே] சேர்ந்த ஒரு தாவர இனமாகும். இதன் தாவரவியல் பெயர் பாத்தீனியம் ஹிஸ்டறோபோரஸ் (Parthenium Hysfero Phorus) ஆகும். பாத்தீனியம் ஏறக்குறை 1-1.5மீற்றர்உயரத்திற்கு வளரக் கூடியவறட்சியான காலநிலையைத் தாங்கக்கூடியது. இச்செடியின் வாழ்க்கைக்காலம் 6-8 மாதங்களாகும். இதன் பூக்கள் வெண்ணிறமானது இரண்டு மில்லி மீற்றர் தடிப்பானவையாகும். ஒரு தனிச்செடி நூற்றுக்கு மேற்பட்ட பூமுடிகளை தோற்றுவிக்கக் கூடியது. ஒவ்வொரு பூமுடியும் ஏறத்தாழ 300 விதைகளைக் கொண்டது. எனவே ஒரு தனிச் செடியில் இருந்தும் பல்லாயிரம் விதைகள் உருவாகின்றன. விதைகள் நீருடனும், விலங்குகளின் தோல், மயிர் மற்றும் வாகனங்களின் ரயர் போன்றவற்றுடன் ஒட்டிப் பரவுகின்றன. காற்றினால் பரவுவது மிகக் குறைவு. இவ்விதைகள் 2-3 ஆண்டுகளின் பின்னரும் கூட வீரியத்துடன் முளைக்கின்றன. இவ்வியல்புகளினால் மிகக் குறுகிய காலத்தில் பரந்த நிலப்பரப்பில் மிகவேகமாகப் பரவக் கூடியது.

இத்தாவரத்தினால் சுரக்கப்படும் இரசாயனப்பதார்த்தம் பார்த்தீனியம் (Partenium) எனப்படும். இது மழை, பனி, நீர் போன்றவற்றுடன் சேர்ந்து கசிவதன் மூலம் மற்றைய தாவரங்களின் ம்ளைத்திறனையும், வளர்ச்சியையும், இனப்பெருக்கத்தையும் பாதிப்பதாக வேறுநாடுகளில் அவதானிக்கப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து வெளியேற்றப்படும் இவ்விரசாயனப் பதார்த்தும் மனிதனுக்கு ஒவ்வாமையை உண்டாக்கி தோல் நோயையும்(Dermatites) சுவாசத்தில் பாதிப்பையும் ஏற்படுத்துகின்றன. ஹே-காச்சல் (Hayfever) என்ற நோயையும் ஏற்படுத்துகின்றது.

இத்தாவரத்துடன் தொடர்ச்சியாக நீண்ட நாட்களுக்கு வேலை செய்யும் போது தோலில் பெரும்பாதிப்புகள் ஏற்படுகின்றன. ஏனைய தாவரங்களின் வளர்ச்சியையும், பெருக்கத்தையும் கட்டுப்படுத்துவதால் மிக

நா.குகானந்தன்,
விவசாயத்திணைக்களம்,
முல்லைத்தீவு.

விரைவில் ஏனையதாவரங்கள் வளரும் நிலங்களை ஆக்கிரமித்து இவ்விடங்களில் உள்ள துவாரப்பரம்பலில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. இதன் மகரந்தம் ஏனைய பயிர்களின் பூக்களில் விழும்போது அவற்றின் மகரந்தச் சேர்க்கைக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதால் பயிர் விளைச்சல் பெருமளவில் குறைகின்றது.


விலங்குகள் புல்லுடன் இத் தாவரத்தை உண்ணும் போது அவற்றின் பால், இறைச்சி போன்ற விலங்கு உற்பத்திகளில் வித்தியாசமான நிறங்களை உண்டாக்கி அவற்றின் தரத்தைப் பாதிப்பதாகவும் அறிய முடிகிறது.

மேற்கூறிய பல்வேறு காரணங்களினால் இது பல ஆக்கிரமிப்பு குணாதிசயங்களைக் கொண்ட ஒரு தாவரமாக விளங்குகின்றது. இத் தாவரம் பரவுவதைக் கட்டுப்படுத்தாவிட்டால் இது எமது இயற்கைச் சூழலில் உள்ள தாவரங்களின் வளர்ச்சியையும், பெருக்கத்தையும், விளைச்சலையும் கட்டுப்படுத்தி ஆக்கிரமித்துக் கொள்ளும். அத்துடன் இயற்கையாக உள்ள தாவரப்பல்வகைத் தன்மைக்கும் ஊறு விளைவித்து இயற்கைச் சமநிலையை மாற்றக் கூடியது. மனித இனத்திற்கும், விலங்குகளுக்கும், பல நோய்களையும் சுகாதாரச் சீர்கேடுகளையும் உருவாக்கி பெரும் பாதிப்பையும் தாக்கத்தையும் ஏற்படுத்தும். எனவே இத் தாவரத்தை பரவவிடாது கட்டுப்படுத்த வேண்டியது எமது தலையாய கடமையாகும்.


கட்டுப்படுத்தல்:-

* பார்த்தீனியத் தாவரம் பூக்கமுன் கைகளால் பிடுங்கிவிடல் கைகளினால் பிடுங்கும்போது மனிதனுக்கு தீங்கு விளைவிப்பதால் கையுறைகளை அணிவது மிக அவசியமாகும்.


*கிறைபோசெட் களை நாசினியை சிபார்சின்படி விசிறவும்.



யப்பானின் சோனி நிறுவனம் தயாரித்துள்ள புதிய வகைக் கமரா. இது 1.33 சென்ரிமீற்றர் திரையைக் கொண்டதும் செல்லிட தொலை பேசியையும் கொண்டது.



இயந்திர மனிதர்களைப்போன்று இயந்திர டைனோசர்களை யப்பானிய நிறுவனம் ஒன்று வடிவமைத்துள்ளது. இதன் உயரம் 5.3 அடியாகும்.நீளம் 11.5 அடி. நிறை 85 கிலோ கிறாம் ஆகும். இது டோக்கியோவில் நடைபெறும் உலக கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்டது.



மொடல் அழகிகளாக காட்சிக்கு வைக்கக் கூடிய றோபோவையே இங்கு காண்கிறீர்கள். இது"பலட்" என அழைக்கப்படுகிறது. இது காட்சிகளின்போது அழகிகளைப் போன்று வலம்வரும்.

# எயிட்ஸ் கிருமிகள் பரவுவது எப்படி

எய்ட்ஸ் கிருமிகள் பரவுவதற்கு ஓரினச்சேர்க்கை மற்றும் தகாத செக்ஸ் உறவுகளை முக்கிய காரணமாகக் சொல்லலாம். எய்ட்ஸ் கிருமியால் பாதிக்கப்பட்டவருடன் செக்ஸ் உறவு வைத்துக் கொண்டாலோ, அவருக்கு போடப்பட்ட ஊசியை சுத்தம் செய்யாமல் மற்றவருக்குப் போடும் போதோ கிருமிகள் பரவும். எய்ட்ஸ் நோயுள்ள தாய் மூலம் குழந்தைக்கு கிருமிகள் பரவும். ரத்தம் சம்பந்தப்பட்ட விடயங்களை தானம் செய்யும் போது எயிட்ஸ் கிருமிகள் இருந்தால் அதுவும் பரவும். தலஸ்லீமா என்ற வியாதி உள்ளவர்களுக்கு இரத்தச் சிவப்பு அணுக்கள் குறைந்து கொண்டே இருக்கும். இவர்களுக்குப்பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை ரத்தம் மாற்றிக் கொண்டே இருக்க வேண்டும். இந்த மாற்றத்தின் போதும் எய்ட்ஸ் கிருமிகள் வந்து விட வாய்ப்புண்டு.

சிறுநீரகம் செயலிழந்த நோயளிக்கு டயாலிஸிஸ் செய்யும் போது ஒருவரிடம் இருந்து எய்ட்ஸ் மற்றவருக்குப் பரவவாய்ப்புண்டு.இதுதவிர பல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்குப்போகும் போது டாக்டர்கள் பயன்படுத்தும் கருவிகள் மூலம் ஒருவரிடம் இருந்து மற்றவருக்குப் பரவவாய்ப்புகள் மிக அதிகமாகஉள்ளது.

எய்ட்ஸ் கிருமிகள் நமது உடலில் புகுந்ததும் முதல் வேலையாக டி-ஹெல்ப்பர் எனப்படும் செல்களை தாக்கிச் சாப்பிடும். இதனால் நம்மை பாதுகாக்கும்போர் வீரர்களின் எண்ணிக்கை குறைந்து விடும். இதையடுத்து பக்டீரியா மற்றும் காளான்போன்ற மற்ற வியாதிளுக்கான கிருமிகள் நோயாளியின் உடலுக்குள் நுழைந்து பிரச்சினைகளை உண்டு பண்ணும்.

## சிகிச்சை

இன்று-வயது வித்தியாசமின்றி ஆண், பெண் இருபாலாருக்கும் குறட்டைவிடும் பழக்கம் இருக்கிறது. வீட்டில் ஒருவருக்கு இந்தபிரச்சினை இருந்தால் போதும். மற்றவர்களின் தூக்கம் கெட்டுவிடும். இதற்கு சிகிச்சையளிக்க கே.டி.பி.லேசர் என்கிற புதியசாதனம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கே.டி.பி.லேசர் உடன் சென்சரா மைக்ராஸ்கோப் உதவியுடன் இச்சிகிச்சை மேற்கொள்ளப் படும்.சிகிச்சையின் மூலம் ஒரேநாளில் குறட்டையிலிருந்து விடுதலை அடைந்து விடலாமாம். இப்போது இந்தகருவி இந்தியாவில் சில முக்கியமான மருத்துவமனைகளில் மட்டும் அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

முல்லைத்தீவில் இருக்கின்ற எங்களது கடற்படை தளம் ஒன்றுக்குள் கடல் பெருகி இடுப்பளவுக்குத் தண்ணீர் வந்து விட்டதாக புதுக்குடியிருப்பில் உள்ள தளம் ஒன்றில் இருந்து சங்கிலி என்ற போராளி தொலைத் தொடர்புக் கருவி மூலம் எனக்கு அறிவித்தார்.

வழமைக்கு முற்றிலும் மாறாக நாங்கள் எதிர்பாராத சம்பவம் என்பதால் அவரிடம் சம்பவத்தை மீண்டும் தெளிவாகக் கேட்டுக்கொண்டேன்.

## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

அப்படியானால் அவர்களின் தொடர்பு இருக்கிறதா? என்று கேட்டேன். "ஆம் தொடர்புடன் தான் இருக்கிறார்கள்" என்றார் அந்தப் போராளி. இவர்களது தொடர்பு இருக்கிறது என்றவுடன் சாளையில் இருக்கின்ற மகளிர் தளத்தின் தொடர்பிருக்கிறதா? நிலைமை எப்படி? என்று

எங்களது படகுகள் கடலுடன் அடித்துச் செல்லப்படாத வகையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. நான் கடற்கரையிலிருந்து எழுபது மீற்றர் தொலைவில் நின்றுகொண்டிருந்தேன். எனக்கு முன்னுக்கு அதாவது கடலில் இருந்து இருபது மீற்றர் அளவில் எல்லாரும் நின்று மீட்பு நடவடிக்கைகளில் வேகமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அவற்றை எல்லாம் பார்த்து ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்தேன்.

திரும்பவும் கடல் பொங்கி வரும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. அதனால் எங்களது வேலைகளில் ஆழமாக இறங்கியிருந்தோம்.

இப்படியிருக்க கரையில் நின்ற பெண் போராளிகள் " அண்ணா கடல் திரும்பவும் பொங்கிக்

நான் நிலைமைகளை அவருக்குச் சொன்ன உடன் எழுபத்தைந்துக்கும் அதிகமான போராளிகளையும், உழவுஇயந்திரங்களையும் எங்களது தளத்துக்கு உடனடியாக அனுப்பியிருந்தார். அதேபோல ஆட்லறிப் படைப்பிரிவின் தளபதி மணிவண்ணன் தனது போராளிகளையும் உழவு இயந்திரங்களையும் அனுப்பியிருந்தார்.

இதற்கிடையில் அரசியல்துறையின் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் பிரிவுப்பொறுப்பாளராக இருக்கும் சரவணனுடன் தொடர்புகொண்டு அவினூடாக தளபதிகேணல் தீபனுடன் கதைத்து நிலைமைகள்ளச் சொன்னேன். அதன் பின்னர் கல்லூரியில் இருக்கின்ற போராளிகள்,பொறுப்பாளர்கள் அனைவரையும் வடமராட்சிகிழக்கிற்குஅனுபபி நிலைமைகளை ஒழுங்குபடுத்தினர் தளபதி தீபன்

தமிழீழத்தின் கரையோரப்

மோசமாய் பாதிப்படைந்திருந்தது. போராளிகளும், காவல்துறை உறுப்பினர்களுமாக காயப்பட்டவர்களையும், உயிரிழந்து போனவர்



**முல்லைத்தீவில் உள்ள எங்களது கடற்படைத்தளம் ஒன்றினுள் கடல் ஏறிவிட்டதாகத்தான் முதலில் தகவல் கிடைத்தது. இப்படிக் கிடைத்த தகவலை அடுத்து பெண் போராளிகளின் தளத்தின்தொடர்பு கேட்டேன். அவர்களின் தொடர்பு இல்லை என்றவுடன் நான் சம்பவ இடத்திற்குப்போய்விட்டேன். அங்கு போராளிகளே நிலைமையைச் சீர்செய்துகொண்டிருந்தார்கள். இவற்றையெல்லாம் ஒழுங்குபடுத்திவிட்டு முல்லைத்தீவுக்குள்போனேன். முல்லைத்தீவு நகரம் முழுவதும் கடல் சூழ்ந்திருந்தது. கடற்கோள் வந்து இப்படி ஊரையே உருக்குலைத்துவிடும் என்று நான் நினைத்ததேயில்லை. உருமாறிப்போன முல்லைத்தீவைப் பார்த்தபொழுது அதனுள் இருந்த மக்களின் நிலை எப்படியிருக்கும் என்ற ஏக்கம்– தவிப்பு எல்லாம் என்னைப் பற்றிக்கொண்டது என சுனாமியால் உருமாறிப்போன முல்லைநகரின் மீட்பு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி மேற்கொண்டிருந்த தமிழீழ கடற்படையின் சிறப்புத்தளபதி கேணல் சூசை அவர்கள் தனது அனுபவத்தைப் பகிர்ந்திருந்தார். அவர் பகிர்ந்தவை இந்தப் பகுதியில் உங்களுக்காக...**




# உருக்குலைந்து போன முல்லைத்தீவைப் பார்த்தவுடன் மக்களின் நிலை குறித்து ஏங்கினேன்

பகுதி 52

கேட்டேன்."சாளையில் இருக்கின்ற தளத்தின் தொடர்பு இல்லைஅண்ணா அதன் நிலைமை எப்படி என்று தெரியாது" என்றார் மறுமுனையிலிருந்து.

தளத்தின் தொடர்பு இல்லை என்றவுடனேயே நான் இருந்த முகாமில் இருந்து புறப்



பட்டுச்சாளையில் இருக்கிறதளத்துக்கு சரியாக ஒன்பது இருபது மணிக்குப் போய்ச்சேர்ந்து விட்டேன்.

நான் அங்குபோய்க்கொண்டிருக்கின்ற பொழுது அந்த தளத்திலிருந்த போராளிகள் அலையுடன் அடிபட்டுப்போன தமது உடமைகளை மீட்டுக்கொண்டிருந்தனர். யுத்தகளங்களில் விழுப்புண்ணடைந்திருந்த- அவையங்களை இழந்திருந்த கணிசமான போராளிகளும் அந்தத்தளத்தில் இருந்தார்கள். கடல் அலையின்வேகமான தாக்கத்திலிருந்து அவர்கள் அனைவரும் தப்பியிருந்தார்கள். ஏனென்றால் அனைவரும் நீச்சலில் திறமையானவர்கள். அதனால் ஏலாதநிலையில் இருந்த போராளிகளையும் காப்பாற்றி விட்டார்கள். சிலருக்கு காயங்கள் ஏற்பட்டிருந்தது. அவர்களைச் சிகிச்சைக்காக அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

கொண்டு வருகுது" என்று சொன்னார்கள். அந்தத் தளத்தை சுற்றி நாங்கள் ஒரு மண்அணையை அமைத்திருந்தோம். போராளிகள் சொல்லி முடிப்பதற்கிடையில் அந்த மண்ணணை இருந்த இடத்திற்குத் தண்ணி வந்துவிட்டது.

அதன்பிறகு பாதுகாப்பிடத்துக்கு எங்களால் நகரமுடியாமல் போய்விட்டது. இத்தகைய அபாயநிலையைக்கருத்தில் கொண்டு பெண் போராளி ஒருவர் உழவுஇயந்திரம் ஒன்றை இயக்கியபடி தயார் நிலையில் வைத்திருந்தார். அனைவரும் அதில் ஏறிக்கொண்டோம். அதன் பிறகு



உழவு இயந்திரம் வேகமாக பிரதான வீதியை வந்தடைந்துவிட்டது.

குமுறி அடித்து வந்த அலை கணிசமான உயரத்தில் வந்தது. ஆனாலும் எங்களது மண் அணையைத் தாண்டி மீண்டும் கடலுக்குள் போக முடியாத நிலையில் அப்படியே பள்ளங்களுக்குள்ளால் இறங்கிப் போய்க்கொண்டிருந்தது.

அதன்பிறகு மீண்டும் அந்தத் தளத்துக்குப் போய் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கின்ற நேரம் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான் தொடர்பு கொண்டார். அவருக்கு நான் நிலைமைகளைச் சொன்னேன்.

பிரதேசங்களில் சுனாமி ஏற்படுத்திய பாதிப்புக்கள் பற்றிய தகவல்களை பாதிப்புக்களை அறிந்து அவற்றை எனக்கு உடனுக்குடன் தெரியப்படுத்திக் கொண்டிருந்த பெரும் பணியையும் சரவணன்தான் செய்து கொண்டிருந்தார்.

அதேபோல சுனாமியால் பாதிக்கப்பட்ட எங்களது அழிவுநிலையை சர்வதேச உலகுக்கு வெளிப்படுத்தும் வகையில் ஊடகவியலாளர்களை ஒழுங்குபடுத்தி எனது இடத்திற்கு அனுப்பி அழிவின் உக்கிரநிலையை வெளிப்படுத்துகின்றபணியைத் செய்துமுடித்தார் போராளி சரவணன். அவரது பணி எங்கள் நடவடிக்கையில் முக்கியமானதாக இருந்தது.

இப்படியிருக்க முல்லைத்தீவின் நிலைமைகளை அறிந்து எங்களுடைய போராளிகளை உடனடியாகவே அனுப்பிவிட்டேன். அதுமட்டுமில்லாமல் எல்லா இடங்களுக்கும் அறிவித்து உதவிகள் அனைத்தையும் முல்லைத்தீவுக்கு அனுப்புமாறும் அறிவித்துக்கொண்டிருந்தேன்.

இதன் பின்னர் சாளை தளத்தில் இருந்து புறப்பட்டு முல்லைத்தீவுக்குள் போய்க் கொண்டிருந்தேன். வட்டுவாகல் பாலத்தில் கடல் பொங்கியபடி வந்து கொண்டிருந்தது. அதனால் எங்களது வாகனத்தைக் கொண்டு செல்ல முடியாத நிலை உருவானது.

அதனால் நாங்கள் நடந்து போய்க் கொண்டிருந்தோம். அந்த வழியால் வந்த பொதுமகன் ஒருவர் என்னை தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு போய் இறக்கிவிட்டார்.

வட்டுவாகல் பாலத்தைத் தாண்டி உள்ளுக்குள் போனபிறகு செல்வபுரம் வீதியால முல்லைத்தீவுக்குள்ள போகேலாத அளவு

களையும் மீட்டெடுத்துக்கொண்டிருந்தனர். முல்லைத்தீவுக்கச்சேரி அடியில் போய் ஏறுகின்ற பின்வீதியால் போய்க்கொண்டிருந்தோம்.

அந்த வீதியிலும் தண்ணி மேவிப்பாய்ந்து கொண்டிருந்தது. இடுப்பளவு தண்ணீர் அதற்குள்ளாலும் இறங்கி நடந்து முல்லைத்தீவு நகரத்துக்குள் போய்ச்சேர்ந்து விட்டோம்.

ரவுணுக்குள் போகின்ற பொழுது புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான், நிதித்துறைப் பொறுப்பாளர் பாலதாஸ் அவரின் நிர்வாகத்துக்குள் இருக்கின்ற

**அ.யோகீசன்**

மணிமாறன்,பாபு, ரூபன் உட்பட நிறையப் போராளிகள் வந்திருந்தனர். அனைவரும் சேர்ந்து நிலைமையைப் பார்த்தோம்அதன் பிறகு மீட்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது.

யுத்த நடவடிக்கைகளில் உடனடியாகவே பலபகுதிகளைப் பிடித்திருக்கிறோம். நீண்டகாலமாக நடந்த யுத்த பரிமாணத்தில் கூட இப்படியான அழிவுகளை நாங்கள் சந்திக்கவில்லை. அப்படித்தான் முல்லைத்தீவின் நிலை இருந்தது.

முல்லைத்தீவு முழுவதும் கடல் சூழ்ந்திருந்தது. கணிசமான கட்டடங்களைக் கடல் கொண்டு போய்விட்டது. ஒருசில இடிந்த கட்டடங்களின் சுவர்கள் தண்ணீருக்குள்ளால் தெரிந்து கொண்டிருந்தது. இந்த நிலையில் முல்லைத் தீவைப்பார்க்கின்றபொழுது வேதனையாக இருந்தது.

இப்படி கடற்கோள் வந்து ஊரையே உருக்குலைத்து விட்டுப்போகும் என்று நான் ஒரு போதும நினைத்ததேயில்லை. இந்த அழிவு களைப் பார்த்தவுடன் அதனுள் இருந்த மக்கள் என்னவாகியிருப்பார்கள் என்கின்ற ஏக்கம்-தவிப்பு எல்லாம் என்னுள் ஒன்றாய்ச் சேர்ந்து சுழன்று கொண்டிருந்தது என்றார் தமிழீழ கடற்படையின் சிறப்புத்தளபதி கேணல் சூசை அவர்கள்.

மீட்பு நடவடிக்கையை ஒழுங்குபடுத்தி மேற்கொண்டிருந்த அவரின் அனுபவம் அடுத்த பகுதியிலும்.

தொடரும்...

# புனரமைப்புப் பணிக்கு 157.5 மில் டொலர் உதவி

(கொழும்பு)

இலங்கையின் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் புனரமைப்பு பணிகளுக்காக சர்வதேச நிதிக் கண்காணிப்பு அமைப்பு 157.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை கடந்த மார்ச் மாதம் வழங்கியதாக அறிவித்துள்ளது.

சர்வதேச நிதிக் கண்காணிப்பு அமைப்பின் அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. உடனடியாக இலங்கைக்கு கிடைக்கும் வகையில் இந்த உதவித் தொகை வழங்கப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (32)

# புலிகளுக்கெதிரான முறைப்பாடு வாபஸ்

கடந்த செவ்வாய்க்கிழமை விடுதலைப் புலிகள்,தமது மூதூரிலுள்ள தோப்பூர் இராணுவ முகாமை நோக்கி மோட்டார் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளனர் என சிறிலங்கா இராணுவத்தினர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் செய்த முறைப்பாட்டை வாபஸ் பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமது முகாமைநோக்கி மோட்டார் குண்டுத் தாக்குதலை நடத்திய தாகதிருகோணமலை மாவட்ட இராணுவ பிரிகேடியர், யுத்தநிறுத்த கண்காணிப புக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தார். இது தொடர்பான பிரிகேடியரின் கூற்றை மறுத்துரைத்த திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ். எழிலன், விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதி எல்லைக்குள்ளேயே பயிற்சியில் ஈடுபட்டனர் எனத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# மீள்கட்டுமானம் விரைவாக்கமில்லை; சர்வதேச அமைப்புக்கள் குற்றச்சாட்டு!

(கொழும்பு)

ஆழிப்பேரலையின் பின்னரான மீள்கட்டுமான பணிகள் எதிர்பாரத்த அளவு வேகமாக நடைபெறவில்லை என சர்வதேச நிதி அமைப்புகள் குற்றம் சாட்டியுள்ளன.இலங்கைக்கு போதுமான நிதி உதவி மற்றும் நிவாரண உதவிகள் வழங்கப்பட்ட போதிலும் அரச இயந்திரத்தின் செயற்பாடற்ற தன்மை காரணமாக மீள் கட்டுமானப் பணிகள் மந்த கதியிலேயே நடைபெறுவதாக அந்த அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. (32)

# சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிக்க பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் வாய்ப்பளிக்கும்

## - சனாதிபதி சந்திரிகா அபிப்பிராயம்

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உருவாக்கப்படவுள்ள பொதுக் கட்டமைப்பானது தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்குரிய வாய்ப்பினை வழங்கும் என சனாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தமிழ்-சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு சனாதிபதி வழங்கியுள்ள வாழ்த்துச் செய்தியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக 40 ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்துள்ள நிலையில் இம்முறை புதுவருடக் கொண்டாட்டங்கள் இன்றி அமைதியான முறையில் நடைபெறுகின்றது.

ஆழிப்பேரலையானது நாட்டின் சகல இன மக்களையும் ஒன்றிணைத்துள்ளது.பாதிக்கப்பட்ட மக்களுக்காக நாட்டிலுள்ள அனைத்து இனத்தவர்களும் இணைந்து நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டமை முக்கிய திருப்பமாக அமைந்துள்ளது.

கடந்தகால கசப்புணர்வுகளை மறந்து தவறுகளை மன்னித்து புதுவருடத்தில் நிலையான சமாதானம் ஒன்றினைப் பெறுவதற்கு அனைவரும் பாடுபட வேண்டுமென சனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். (32)

# 18 ஆவது அரசியல்யாப்பு திருத்தம் தொடர்பாக எதிர்க்கட்சிகளுடன் இணக்கத்திற்கு அரசு முயற்சி

அரசியல் யாப்பில் 18ஆவது திருத்தம் தொடர்பாக சிறிலங்கா நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எதிர்க்கட்சி உட்பட அனைத்துக் கட்சிகளின் இணக்கப்பாட்டை பெறுவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக நீதி அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இது குறித்து ஏற்கனவே கலந்துரையாடப்பட்டுள்ளது. ஐ.தே.க.விலுள்ள சட்ட வல்லுநர்களுடனும் இது குறித்து விரைவில் பேசப்படவுள்ளது.

உத்தேச அரசியல்யாப்பு திருத்தத்தின் பிரகாரம் பிராந்திய மட்டத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்படும். இதற்கு ஐ.தே.க. சில யோசனைகளை முன்வைத்துள்ளது.

இத்தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை நாடாளுமன்றத்தில் தேவை என்றும் நீதியமைச்சர் தெரிவித்தார்.

# குடிநீர் போத்தல் விற்பனையாளருக்கு விரைவில் கட்டாயப்பதிவுச் சட்டம்

சிறிலங்காவில் குடிநீரை போத்தல்களில் அடைத்து விற்பனை செய்பவர்கள் சுகாதார திணைக்களத்தின் உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரசபையிடம் அதனை பதிவு செய்தல் வேண்டும்.

இது தொடர்பான சட்டம் வர்த்தமானி மூலம் விரைவில் அறிவிக்கப்படும் எனச் சிறிலங்கா உணவுக் கட்டுப்பாட்டுசபையின் உதவிப் பணிப்பாளர் எஸ்.நாகையா தெரிவித்துள்ளார். இது பற்றிய வர்த்தமானி அறிவிப்பு அடுத்த வாரமளவில் வெளியிடப்படும் போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீரை விநியோகிப்பவர்கள் தமது வியாபார நடவடிக்கைகளை தொடர்ந்து நடத்த வேண்டுமாயின் கட்டாயம் அதனைப் பதிவு செய்ய வேண்டும். ஏற்கனவே போத்தல் குடிநீர் விற்பனையில் ஈடுபடும் சிலர் தமது வியாபாரத்தை பதிவு செய்து இருக்கின்றனர். பாவனையாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் பதிவு செய்யும் வியாபாரிகள் மட்டுமே குடிநீர் போத்தல்களை சந்தைக்கு விட அனுமதிக்கப்படுவார்கள்.முந்நூற்றுக்கும் மேற்பட்ட விற்பனை குறியீடுகளுடன் குடிநீர் போத்தல்கள் சந்தையில் இருக்கின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


# தமிழீழப் போக்குவரவுக் கழகம்

## தொழில்நுட்பவியலாளர் (வாகன மெக்கானிக்)

## பயிலுநர் தேவை

பின்வரும் தகைமையுடைய ஆண்பாலோர் நேரில் விண்ணப்பங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

**தகைமைகள்:-**

01.கல்வித்தகைமை :- ஆண்டு 07
02.அகவை :- 18 தொடக்கம் 23 வரை

**குறிப்பு:-**

01. 27.04.2005 ஆம் நாள் விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகாமையிலுள்ள தமிழீழப்போக்குவரவுக் கழகம் நடுவப்பணிமனைக்கு வருகை தரவும்
02. பயிற்சிக்காலத்தில் சம்பளம் வழங்கப்படும்.

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப் பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை.
விசுவமடு.

(சி.11637)

# தமிழீழப் போக்குவரவுக் கழகம்

## நடத்துநர் பணிக்கான விண்ணப்பம் கோரல்

பின்வரும் தகைமையுடைய ஆண்பாலோர் நடத்துநர் பணிக் கான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

**தகைமைகள்:-**

01.கல்வித்தகைமை :- ஆண்டு 10
02.அகவை :- 21 தொடக்கம் 35 வரை
03.உயரம் :- 05 அடி 05 அங்குலம்

**குறிப்பு:-**

01.விண்ணப்ப முடிவு நாள் :- 30.04.2005
02.சம்பளம்

$\frac{4,430\text{-}5,530}{10\times110}$ +2,700,00=7,130.00+சிறப்புக் கொடுப்பனவு 2,300.00=9,430.00

03. விண்ணப்பத்தாரருக்கான நேர்முகத் தேர்வு:-02.05.2005 ஆம் நாள் விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகில் உள்ள பணிமனையில் நடைபெறும்
04. நேர்முகத் தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித் தகைமை, அகவை என்பவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.
05. விண்ணப்பப்படிவங்களை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி.கிளிநொச்சி, வெள்ளாங்குளம், முகமாலை ஆகிய இடங்களில் உள்ள நேரப்பணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-
முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப் பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை.
விசுவமடு.

சி.11636

# இந்தியா-அமெரிக்கா இடையிலான கப்பல் போக்குவரத்து ஒப்பந்தம் கைச்சாத்து

(புதுடில்லி)

**இந்தியா- அமெரிக்கா இடையே வீதி, கப்பல் போக்குவரத்து தொழில் நுட்ப ஒப்பந்தங்களில் இந்திய மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு கையெழுத்திட்டுள்ளார்.**

வீதிக்கட்டமைப்பு மற்றும் கடல்சார் கட்டமைப்பில் தொழில் நுட்ப பரிமாற்றத்திற்கான இரண்டு ஒப்பந்தங்களில் இந்தியாவும், அமெரிக்காவும் நேற்று முன்தினம் கையெழுத்திட்டன. இந்தியாவின் சார்பில் மத்திய கப்பல் சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் டி.ஆர். பாலுவும், அமெரிக்காவின் சார்பில் இந்தியா வந்துள்ள அந்நாட்டின் போக்குவரத்துத்துறை அமைச்சர் நார்மன் மினட்டாவும் கையெழுத்திட்டனர்.

இதன்படி போக்குவரத்து இயல் மற்றும் தொழில்நுட்பம் குறித்த ஒப்பந்தத்தின்படி இரு நாடுகளும் வீதி போக்குவரத்து அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்களில் நீண்ட கால ஒத்துழைப்பை ஊக்குவிக்க உள்ளன. தரைவழிப் போக்குவரத்து, சாலைப்பாதுகாப்பு கணினிசார் போக்குவரத்து கட்டமைப்பு, ஊன முற்றோருக்கான போக்குவரத்து வசதிகள் போன்ற துறைகளில் இந்தியாவும், அமெரிக்காவும் தங்களது திறன்களை பகிர்ந்து கொள்ள இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சேதுசமுத்திர திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதியளிக்கும் - டி.ஆர். பாலு

சேதுசமுத்திர திட்டத்துக்கு. மத்திய அரசு விரைவில் அனுமதி அளிக்கும் என்று மத்திய கப்பல் மற்றும் சாலைபோக்குவரத்து நெடுஞ்சாலை துறை அமைச்சர் டீஆர்.பாலு உறுதியளித்துள்ளார்.

இவ்விடயம்பற்றி கருத்து தெரிவித்த டீ.ஆர் பாலு சேதுசமுத்திர திட்டத்துக்கான சுற்றுச்சூழல் அனுமதி தற்போது கிடைத்துள்ளது. இப்படி சுற்றுச்சூழல் அனுமதி கிடைத்திருப்பதால் சேதுசமுத்திர திட்டத்துக்கு இனி மந்திரிசபையின் அனுமதி விரைவாகக் கிடைக்கும் என்று நம்புகிறேன். சேதுசமுத்திர பணிகளை இந்த சுற்றுச்சூழல் அனுமதி விரைவுபடுத்தும் என்று கருதுகிறேன்.

சேதுசமுத்திர திட்டம் பற்றி தமிழக முதல்வர் ஜெயலலிதா பல சந்தேகங்களை எழுப்பியிருக்கிறார். இந்த திட்டம் பற்றி அதிகாரிகள் அவருக்கு தவறான தகவல்களை அளித்திருப்பார்களென நினைக்கிறேன். சேதுசமுத்திர திட்டத்தை இலங்கை அரசும் எதிர்க்கவில்லை. அவர்களிடம் இருந்து இதுவரை எந்த ஆட்சேபனையும் வரவில்லை சேதுசமுத்திரதிட்டம் நடைமுறைக்கு வந்தால் அதனால் இலங்கையின் வட பகுதியிலுள்ள துறைமுகங்களும் பயன் அடையும் எனத் தெரிவித்தார்.

## பீகாரில் ரப்ரியை முதல்வராக்குவேன் -லல்லு பிரசாத்

பீகாரில்இன்னும் ஒரே மாதத்தில் மக்களாட்சியை ஏற்படுத்தி ரப்ரியை முதல்வராக்குவேன் என்று லல்லு பிரசாத் சவால்விடுத்துள்ளார். மத்திய ரெயில்வே துறை அமைச்சரும், ராஷ்டிரிய ஜனதாதள தலைவருமான லல்லுபிரசாத் பாட்னாவில் நேற்று முன்தினம்கூறியதாவது.

பீகாரில் இன்னும் ஒரு மாதத்தில் சனாதிபதி ஆட்சி நீங்கி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக ஆட்சி அமையும், ரப்ரிதேவி மீண்டும் பீகார் முதல்வராக பதவியேற்பார் பீகாரில் ராஷ்டிரிய ஜனதாதளம் கூட்டணி ஆட்சி அமைத்தே தீரும் எங்கள் கூட்டணியில் யார் யார் இடம்பெறுவார்கள் என்பது பற்றி இப்போது தகவல்கூற முடியாது.

விருப்பமுள்ளகட்சிகளும், சுயேச்சைகளும் எங்களுக்கு ஆதரவு தருவார்கள் 243 உறுப்பினர். கொண்ட பீகார் சட்டமன்றத்தில் எங்களுக்கு ஆட்சி அமைக்க தேவையான 122உறுப்பினர் ஆதரவு கண்டிப்பாக கிடைக்கும். சட்டமன்ற தேர்தலில் அதிக இடங்களைப் பிடித்த தனிப்பெரும்கட்சி என்ற முறையில் ராஷ்டிரிய ஜனதாதளத்துக்கு ஆட்சி அமைக்க அனைத்து உரிமையும் உள்ளது என ஆவேசமாக தெரிவித்தார்.

பீகாரில் கடந்த ஆண்டில் இடம் பெற்ற சட்டமன்ற தேர்தலில் எந்த கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காததால் அங்கு சனாதிபதி ஆட்சி இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. .

## சுய சரிதை எழுதும் இந்.முன்னாள் பிரதமர்

இந்தியா- முன்னாள் பிரதமர் தேவகவுடா தனது சுயசரிதையை எழுதுகிறார். கர்நாடக மாநிலத்தில் ஏழைக்குடும்பத்தில் பிறந்து ஒப்பந்தகாரர் தொழில்புரிந்து அரசியலில் நுழைந்து இந்திய பிரதமராக உயர்ந்தவர் தேவகவுடா, தற்போது மதசார்பற்ற ஜனதாதளம் கட்சி தலைவராக இருக்கிறார்.

அவர் பெங்களூரில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசும் போது கூறுகையில் நான் எனது சுயசரிதையை எழுத விரும்புகிறேன் எனது 40 ஆண்டு கால அரசியல் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் அனைத்தும் அதில் இடம்பெறும்.

நான் உயிரோடு இருக்கும்போது அந்த சுயசரிதை நூல் வெளிவராது ஏனென்றால் சிலரது செயல்களை அவர்களது அருகில் இருந்து கவனித்து இருக்கிறேன். அவர்களை பற்றி எனது சுயசரிதையில் எழுதி நான் உயிரோடு இருக்கும் போதே வெளியிட்டால் அது தர்ம சங்கடத்தை ஏற்படுத்தும் என்றார்..

## சங்கராச்சாரியார்கள் உயிர் தப்பினர்

தமிழகம் கலவை சங்கர மடத்தில் நேற்று முன்தினம் திடீரென பரவிய தீயிலிருந்து அங்கு தங்கியிருந்த சங்கராச்சாரியர்களான விஜேந்திரர், ஜெயேந்திரர் ஆகியோர் மயிரிழையில் உயிர்தப்பியுள்ளனர்.

காஞ்சிகோவில் அதிகாரி சங்கரராமன் கொலை வழக்கில் காஞ்சி சங்கராச்சாரியார்கள் ஜெயேந்திரர்,விஜேந்திரர் உட்பட 25 பேர் கைது செய்யப்பட்டனர். பின்னர் பிணையில் விடுதலையான ஜெயேந்திரர் கலவை சங்கர மடத்தில் தங்கியுள்ளார் என்பது தெரிந்ததே.



சென்னையில் உள்ள பிரபல திரையரங்கில் புதுவருடத்தினத்தன்று வெளியான கமலஹாசன் நடித்த 'மும்பை எக்ஸ்பிரஸ்' என்ற ஆங்கில பெயரிலான திரைப்படம் தொடர்பாக வன்முறைகள் இடம் பெறலாம் என எதிர்பார்த்து காவல்துறையினர் திரையரங்கிற்கு பாதுகாப்பு வழங்குகின்றனர்.


## நட்வர்சிங் புஸ்சை சந்தித்தார்

இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் வோஷிங்டன் நகரில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ்சை சந்தித்து பேசினார்.

நட்வர்சிங் 3நாள் பயணமாக அமெரிக்கா சென்றுள்ளார்.அங்கு அ்வர் வோஷிங்டன்நகரில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ்சை சந்தித்து பேசினார். அப்போது ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் இந்திய உறுப்பினர் ஆக அமெரிக்கா ஆதரவு தரவேண்டும் என்று புஷ்சிடம் கேட்டுக்கொண்டார். மற்றும் இருதரப்பு உறவுபற்றி புஷ்சுடன் பேசினார்.

## ரசிகர்கள் மீது தடியடி

புதுவருடத்தை முன்னிட்டு வெளியான நடிகர் ரஜனிகாந் நடித்த சந்திரமுகி படத்தைப் பார்க்கச் சென்ற ரசிகர்கள் படத்தில் வரும் பாடல்காட்சிகளை மீண்டும் ஒருமுறை காண்பிக்குமாறு வன்முறையில் ஈடுபட்டுள்ளதையடுத்து காவல்துறையினர் வன் முறையை கட்டுப்படுத்த தடியடிப் பிரயோகத்தைபிரயோகித்தனர். இதில் பலர் காயமடைந்துள்ளனர்.



கட்டார் நாட்டு மன்னர் சேக் கலீபா அல்-தானி நேற்று முன்தினம் டில்லி சென்றார். அவரை இந்திய சனாதிபதி அப்துல்கலாம், பிரதமர் மன்மோகன்சிங் வரவேற்றனர்.

## முஷாரப்பிற்கு இந்தியாவில் விருந்து



புதுடில்லியில் கிரிக்கெட் போட்டியை பார்க்கச் செல்லும் பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பிற்கு இந்திய சனாதிபதி அப்துல்கலாம், பிரதமர் மன்மோகன்சிங் ஆகியோர் விருந்து கொடுக்கிறார்கள் முஷாரப்பின் இந்தியப் பயணம் மூன்று நாளாக நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தியா-பாகிஸ்தான் அணிகள் இடையே புதுடில்லியில் வருகிற 17ஆம்திகதி நடக்கும் ஆறாவது கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டியை காண பாகிஸ்தான் அதிபர் முஷாரப் இந்தியா செல்வார் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இவ்விஜயத்தின்போது பிரதமர் மன்மோகன்சிங்கும், முஷாரப்பும் சந்தித்து காஷ்மீர் உட்பட பல்வேறு இருதரப்பு பிரச்சினைகள் பற்றி பேச்சு நடத்துவார்கள் எனத் தெரிகிறது. கிரிக்கெட் போட்டியை பார்ப்பதைவிட காஷ்மீர் பிரச்சினை பற்றி பேசுவதுதான் எனக்கு முக்கியம் என்று முஷாரப் ஏற்கெனவே கூறி இருந்தார். எந்தப் பிரச்சினை பற்றியும் பேசலாம் என்று மன்மோகன் சிங்கும் கருத்துத் தெரிவித்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் அந்நாட்டுப் பிரதமர் ஜூனிசிரோ கொய்சுமியை (வலது) அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசுகிறார் இந்திய வர்த்தக அமைச்சர் கமல்நாத்.

## தீவிரவாதிகளை சுற்றிவளைத்து 2000 இந்தியப் படைகள்

(புதுடில்லி)


இந்திய ஜம்முவில் தீவிரவாதிகள் மறைந்துள்ளதாக வந்த ரகசிய தகவலை அடுத்து அனைத்துப்பகுதிகளும் சுற்றிவளைக்கப்பட்டுள்ளன. உதம்பூர் பகுதியில் ராணுவ வீரர்கள் இரண்டாயிரம் பேர் குவிக்கப்பட்டுள்ளனர். தீவிரவாதிகள் யாரும் தப்பிவிட முடியாத அளவிற்கு அதிரடி வளையம் அமைக்கப்பட்டுள்ளது என இராணுவத் தரப்பு தெரிவிக்கிறது.

ஜம்முவில் இருந்து உதம்பூருக்கு கடந்த 13ஆம் திகதி புகையிரத போக்குவரத்துத் தொடங்கியது. தீவிரவாதிகளின் தாக்குதலில் இருந்து பயணிகளுக்குப் பாதுகாப்பு அளிக்க கடும் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ரயில் பாதை முழுவதும் ராணுவ வீரர்கள் ஆங்காங்கே கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். தற்போது ஜம்மு பகுதியில் பனிஹால், குல் பகுதிகளில் ராணுவ வீரர்கள் இரண்டாயிரம் பேர் கூடுதலாக குவிக்கப்பட்டுள்ளனர். வெளிநாட்டுக் கூலிப் படை தீவிரவாதிகள் உட்பட பலர் மறைவிடங்களில் தங்கியிருப்பதாக ரகசியத் தகவல்கிடைத்ததை அடுத்து அவர்களை ஒடுக்க அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.தீவிரவாதிகள் தப்பிச் செல்ல வாய்ப்புள்ள வழிகள் அனைத்தும் அடைக்கப்பட்டு விட்டன.தீவிரவாதிகளென சந்தேகிக்கப்படும் இடங்களில் பொது மக்களின் நடமாட்டத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## காஷ்மீரில் இங்கிலாந்து குழு


இந்தியாவின் எல்லைப்பகுதி நிலமைகளை அறிந்து கொள்ளும் முகமாக இங்கிலாந்து தூதர் மைக்கேல் ஆர்தர் தலைமையிலான குழு ஒன்று காஷ்மீருக்கு சென்றுள்ளது கடந்த ஏழாம்திகதி தொடங்கிய ஸ்ரீநகர் முசாபராபாத் இடையிலான பேருந்து போக்குவரவிற்கு பின் எல்லைப்பகுதிகளில் எப்படிப்பட்ட நிலைமைகள் காணப்படுகின்றன என அறிந்து கொள்வதற்காகவே இக்குழுவினர் காஷ்மீர் சென்றிருப்பதாக அறியவருகிறது.

# நவீத் உல்-ஹசன், அப்ரிடி அபாரம்; பாகிஸ்தான் அணி முன்னிலையில்!



இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் கான்பூரில் நடைபெற்ற ஐந்தாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியிலும் பாகிஸ்தான் அணி ஐந்து விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுக்கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தது.




தொடக்க வீரர்களாக சேவாக், சச்சின் களமிறங்கினர். பாகிஸ்தான் வேகப் பந்து வீச்சாளர் நவீத் உல்ஹசனின் அபாரமான பந்து வீச்சில் இந்திய அணி திணறியது. இதனால், 26 ஓட்டங்களுக்கு முக்கிய மூன்று விக் கெட்டுக்களை இழந்தது இந்தியா. டெண்டுல்கர் ஒரு ஓட் டத்துடனும், சேவாக் ஐந்து ஓட்டத்துடனும், டோனி 11 ஓட்டத்துடனும் ஹசனின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தனர்.

பின்னர் ராவிட்டுடன் இணைந்த யுவராஜ்சிங் சிறப்பாக ஆடியபோதும் நிலைத்திருக்க முடியவில்லை. அவரும் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ராவிட்டுடன் இணைந்த கைப் பொறுப்புடன் ஆட ஓட்ட வேகம் அதிகரித்தது. இருவரும் இணைந்து 133 ஓட்டங்களைப் பகி[illegible]தனர்.

இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் இந்திய அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 249 ஓட்டங்களைப் பெற்றது. ராவிட் 86, கைப் 78, மொங்கியா 33 ஓட்டங்களை முறையே அதிகபட்சமாகப் பெற்றனர்.



250 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அப்ரிடியின் அதிரடி ஆட்டத்தின் உதவியுடன் வெற்றியை இலகுவாக்கியது.

அப்ரிடி 45 பந்துகளைச் சந்தித்து 102 ஓட்டங்களைக் குவித்தார். (20 பந்தில் 50 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது) அவர் ஒன்பது ஆறு ஓட்டம், பத்து நான்கு ஓட்டம் அடங்கலாக இவ் ஓட்டத்தைப் பெற்றார். அப்ரிடி இதுவரை 194 ஆறு ஓட்டங்களைப் பெற்று முன்னிலையில் உள்ளார்.

இவரைவிட சல்மான் பட் 21, மலிக் 41, யுஹானா 24, இன்சமாம் 24, யுனிஸ்கான் 24 ஓட்டங்களை முறையே பெற்றனர். பந்து வீச்சில் கும்ளே இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் நாயகனாக அப்ரிடி தெரிவானார். ஆறாவதும், இறுதியுமான ஒரு நாள் போட்டி நாளை டில்லியில் நடைபெறவுள்ளது.

## சிறிலங்காவில் மும்முனை கிரிக்கெட் போட்டி

இந்திய கிரிக்கெட் அணி தற்போது பாகிஸ்தானுடன் ஒரு நாள் தொடரில் விளையாடி வருகிறது. 17 ஆம் திகதியுடன் இந்தத் தொடர்முடிகிறது. இதைத் தொடர்ந்து இலங்கை அணி இந்தியா வந்து ஐந்து ஒரு நாள் போட்டியில் விளையாடத் திட்டமிட்டது. ஆனால் இந்தப் போட்டித் தொடர் திடீரென்று கைவிடப்பட்டது. இதற்கிடையே இலங்கையில் ஆகஸ்ட் மாதம் மூன்று நாடுகள் கிரிக்கெட் போட்டி நடக்கிறது. இதில் இந்திய அணி பங்கேற்கிறது. மூன்றாவது நாடாக மேற்கிந்தியத் தீவு பங்கேற்கிறது. இதில் ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் தலா இரண்டு முறை மோத வேண்டும் புள்ளிகள் அடிப்படையில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெறும்.

மூன்று நாடுகள் போட்டிக்கு முன்னதாக இலங்கை அணி மேற்கிந்தியத்தீவுடன் இரண்டு டெஸ்ட்டில் விளையாடும்.


## ராகுல் ராவிட் இரண்டாம் இடத்தில்



ஐ.சி.சி டெஸ்ட் தரப் பட்டியலில் இந்தியாவின் ராவிட் இரண்டாம் இடத்தைத் தக்கவைத்துக்கொண்டுள்ளார். மே.தீவின் லாரா மூன்றாம் இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) நேற்று முன்தினம் டெஸ்ட் போட்டிக்கான புதிய தரப் பட்டியலை வெளியிட்டது. தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் சதம் அடித்த லாரா ஆறாவது இடத்தில் இருந்து மூன்றாவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். 872 புள்ளிகளுடன் ராவிட் அதே இரண்டாவது இடத்தில் உள்ளார்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்காவின் நிடினி நான்காவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். மே.தீவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட்டில் இவர் 13 விக்கெட் வீழ்த்தினார்.




பிரேசில், சாபாலோ நகரில் நடந்த கால்பந்துப் போட்டியில், சாபாலோ 3-1 என்ற கோல் கணக்கில் கில்மெஸ அணியை வீழ்த்தியது. எதிரணி வீரரை ஏமாற்றி மேலே தாவி தலையால் பந்தை முட்டித்தள்ள முற்படுகிறார் கில்மஸ் வீரர் லியான்ட்ரோ டெசபடோ

# வெலிங்டன் டெஸ்ட் போட்டியை நியூசிலாந்து அணி வென்றது!



நியூசிலாந்து-சிறிலங்கா அணிகளுக்கிடையில் வெலிங்டனில் நடைபெற்ற இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி ஒரு இன்னிங்ஸ் மற்றும் 37 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

தனது முதல் இன்னிஸ் ஓட்டங்களைவிட 311 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் மூன்றாம் நாளில் ஜயசூரியவின் விக்கெட்டை இழந்து 10 ஓட்டங்களுடன் நேற்று முன்தினம் நான்காம் நாள் காலை ஆட்டத்தைத் தொடங்கிய சிறிலங்கா பிராங்ளின், நதன்ஆஸ்லே ஆகியோரின் பந்து வீச்சை சமாளிக்க முடியாது. சிறிலங்கா துடுப்பாட்ட வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர், அவ்வணியில் திலகரட்ன, தில்சான், சங்கக்கார ஆகியோர் மட்டுமே அதிகூடிய ஓட்டமாக முறையே 73, 45 என்ற எண்ணிக்கையைப் பெற்றனர். ஜயசூரிய இரண்டு ஓட்டத்துடனும், அத்தப்பத்து 17 ஓட்டத்துடனும், மகேல 13 ஓட்டத்துடனும்,வாஸ் 38 ஓட்டத்துடனும், ,மக்ரூப் 36 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். நியூசிலாந்து சார்பில் பிராங்ளின், ஆஸ்லே முறையே நான்கு, மூன்று என்ற கணக்கில் விக்கெட்டுக்களை வீழ்த்தினர் இறுதியில் சிறிலங்கா 274 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையுமிழந்து தோல்வியைத் தழுவியது.



## சிம்பாப்வே அணியில் மீண்டும் கீத்ஸ்ரீக்; அன்டிப் பிளவர் குற்றம்சாட்டுகிறார்



சிம்பாப்வே அணியிலிருந்து விலகிச் சென்று மீண்டும் அணிக்காக விளையாட வந்திருப்பது தொடர்பாக முன்னாள் அணித்தலைவர் ஹீத் ஸ்ரீக் மீது முன்னாள் டெஸ்ட் நட்சத்திர வீரரான அன்டிப்பிளவர் குற்றம் கூறியுள்ளார். ஸ்ரீக் வீரர்களை தம்முடன் கூட்டிச் சென்று தற்போது அணியில் இணைத்திருப்பதால் போட்டிகளில் பங்கேற்கும் திறனை அவர்கள் இழந்திருப்பார்கள் என்று தெரிவித்துள்ள அவர், அவர்களின் கோரிக்கையை இனம் காணப்படாமல் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்.

## கல்வி வலயங்களுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டி

யாழ்.மாவட்ட கல்வி வலயங்களிடையே தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையேயான மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் இன்று காலை 8.30 மணி முதல் ஆரம்பமாகவுள்ளன.

20 பந்துப் பரிமாற்றங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட இப்போட்டிகள் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அரியாலை கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானங்களில் இடம்பெறவுள்ளன.

நாளை காலை 8.30 மணி முதல் அரையிறுதி மற்றும் மூன்றாம் இடத்திற்கும் இறுதி ஆட்டமும் இடம்பெறவுள்ளன. (41)

விளையாட்டு

## லெப்.கேணல் கங்கையமரன் நினைவாக மின்னொளியில் காற்பந்துப் போட்டி

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மன்னார் மாவட்ட பனங்கட்டிக் கொட்டு பிரதேசத்தை சேர்ந்த லெப்.கேணல் கங்கையமரன் அவர்களின் நான்காம் ஆண்டு நினைவான கால்பந்துச் சுற்றுப் போட்டி தமிழீழ விளையாட்டுத்துறை மன்னார் மாவட்ட பிரிவின் அனுசரணையுடன் மன்னார் மாவட்ட உதை பந்தாட்ட சங்கமும் இணைந்து நடாத்துகின்றது. இச்சுற்றுப் போட்டி இம்மாதம் 25,26,27,28, 29,30/04/2005 ஆகிய தினங்களில் மன்னார் மாவட்ட நகர பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதேவேளை, பள்ளிமுனை பிரதேசத்தில் முதல் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட கப்டன் எட்வின் நினைவான 40 அகவைக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டப் போட்டியும் நடைபெறவுள்ளதென்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

## யாழ்., இளவாலை கல்லூரி சம்பியன்

யாழ்.மாவட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே இடம் பெற்ற 17,19 வயதுப் பிரிவுகளுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் முறையே இளவாலை சென் கென்றீஸ் கல்லூரியும், யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரியும் இவ்வாண்டுக்கான மாவட்ட சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இறுதிப் போட்டிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.17 வயதுப்பிரிவுக்கான இறுதிப்போட்டியில் புங்குடுதீவு மகா வித்தியாலயமும், இளவாலை சென்கென்றீஸ் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் சென்கென்றீஸ் கல்லூரியும், இரண்டாம் பாதி ஆட்டத்தில் புங்குடுதீவு மகாவித்தியாலயமும் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்றுக்கொண்டமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.


மேலதிகமாக வழங்கப்பட்ட கோல்டன் கோல் முறையில் இரண்டாம் பாதி ஆட்டம் முடிவடையும் நேரத்தில் மேலும் ஒரு கோலை சென்கென்றீஸ் கல்லூரி பெற்றுக்கொண்டமையால் இரண்டிற்கு ஒன்று என்ற கோல்களினால் சென்கென்றீஸ் கல்லூரி வெற்றி பெற்றது. 19 வயதுப் பிரிவில் மானிப்பாய் இந்துக்கல்லூரியும், சென்பற்றிக்ஸ் கல்லூரியும் இறுதி ஆட்டத்தில் மோதிக்கொண்டன. முதல் பாதி ஆட்டத்தின் போது சென்பற்றிக்ஸ் கல்லூரி ஒரு கோலைப் பெற்றுக்கொண்டது. ஆட்டம் முடிவடையும் நேரம் வரை இரு அணிகளும் மேலதிகமான கோல்கள் எதனையும் பெறாத நிலையில் சென்பற்றிக்ஸ் கல்லூரி ஒன்றுக்குப் பூச்சியம் என்ற கோல் கணக்கில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை வெற்றி கொண்டது. (41)





யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 17,19 வயதுப் பிரிவினருக்கு இடையேயான ஆட்டத்தில் அணிகள் மோதுவதைப் படங்களில் காணலாம். (41)

## சிந்தனைக்கு



மனிதர்களின் இருப்பை விட மனிதர்களின் செயற்பாடே போராட்ட வரலாற்றின் சக்கரத்தை சுழற்றுகின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 16-04-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## வரலாற்றுப் பாடம்...!

புதுவருட வேளையில் அரசாங்கத்தரப்பில் இருந்து வெளியிடப்படும் தகவல்கள் மக்களுக்குப் பெரும் நம்பிக்கை ஊட்டும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ் அறிவித்தல்களின் பிரகாரம் அரசாங்கத்திற்கும் - விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சுனாமி அனர்த்த நிதி முகாமைத்துவம் தொடர்பான பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் விரைவில் இணக்கப்பாடு ஒன்று ஏற்படும் என்ற நம்பிக்கையை அளிப்பதாகவுள்ளது.

பொதுக்கட்டமைப்பு விரைவில் உருவாவதற்கான சாத்தியப்பாடு- அதாவது இருதரப்பும் கையொப்பம் இடுவது மட்டுமே பாக்கியாகவுள்ளது என்ற அளவிற்கு அரசாங்கத்தரப்பு அறிவிப்புக்கள் உள்ளன. இவற்றில் உச்சமாக அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால, வெளிநாட்டில் உள்ள சிறிலங்கா சனாதிபதியும்-விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரும் நாடு திரும்பியதும் இவ் உடன்பாடு கைச்சாத்திடப்படும் நிலையில் உள்ளது எனத் தெரிவிக்கின்றார்.

அதாவது சனாதிபதி சந்திரிகாவும், அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களும் நாட்டில் இருந்தால் இதுவரையில் உடன்பாடு கைச்சாத்தாகி இருக்கும் என்பது போல் அவரின் கூற்றுக்கள் உள்ளன. இதேவேளை சிறிலங்கா சனாதிபதியும், பிரதமரும் கூட இதனை உறுதிப்படுத்தும் வகையிலேயே பேசியுள்ளனர்.

இதே சமயம், பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படுவது குறித்துப் பலத்த ஆட்சேபத்தைத் தெரிவித்து வந்த ஜே.வி.பி யினரும் பொதுக்கட்டமைப்பிற்குத் தமது ஆதரவை வழங்கலாம், அன்றி எதிர்க்காது ஒதுங்கிப்போகலாம் என்ற ரீதியிலான தகவல்களும் வெளியாகியுள்ளன. அதாவது, ஆளும் கூட்டணியினர் இதில் முரண்படாது இணக்கப்பாடு ஒன்றிற்கு வந்துள்ளனர் என்பது போன்ற தகவல்களே வெளியாகியுள்ளன.

இவற்றை அடிப்படையாகக் கொண்டுதான் மக்களில் ஒரு தரப்பினரிடம் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான நம்பிக்கையும் வலுவடையத் தொடங்கியுள்ளது. ஆனால் சிறிலங்கா அரசு இவ்விடயத்தில் எந்தளவு தூரம் உளப்பூர்வமாகவும், நேர்மையுடனும் நடந்துகொள்ளும் என்பதே முக்கியமானதாகும். ஏனெனில், சிறிலங்கா அரசு தற்பொழுது பொதுக்கட்டுமானம் குறித்துப் பேசுவதில் முழு அளவில் நம்பிக்கை கொள்ளுவதற்கில்லை. இதில் சந்தேகம் எழும்புவதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை. அத்தோடு பொதுக்கட்டமைப்புப் பேச்சுவார்த்தை களில் அரசாங்கம் கூறுவது போல இணக்கப்பாடு ஒன்று ஏற்பட்டுள்ளதா என்பதும் கேள்விக்குரியதே.

ஏனெனில் பொதுக்கட்டமைப்புக் குறித்துப் பேச்சுவார்த்தைகளில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், கையொப்பம் இடும் முன்னேற்றம் கண்டுள்ளதாகவும் அரசாங்கத்தரப்பே கூறிக் கொள்கின்றது ஆனால், விடுதலைப்புலிகள் தரப்பில் இருந்தோ அன்றி சமாதான ஏற்பாட்டாளர்களான நோர்வே தரப்பில் இருந்தோ உடன்பாடு கையொப்பம் இடும் நிலையை அடைந்துள்ளது என்ற நம்பிக்கையூட்டும் எந்த அறிவிப்பும் இதுவரை வரவில்லை.

இதற்குமாறாக, நோர்வே தரப்பினர் - இலங்கைக்கு மீண்டும் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இருதரப்பினர் இடையேயும் பேச்சுக்களை நடத்தவுள்ளனர். இந்நிலையானது பொதுக்கட்டமைப்புக் குறித்த விடயத்தில் இன்னும் முன்னேற்றம் காணக் குறைந்தது சில படிகளைத் தானும் தாண்ட வேண்டியதாகவுள்ளது என்பதையே வெளிப்படுத்தி நிற்கின்றது.

இந்நிலையில், பொதுக்கட்டமைப்புக் குறித்து அரசாங்கத்தின் பிரச்சாரமானது யதார்த்த நிலைக்கு மாறானது என்பது வெளிப்படையானது. ஆனால் இவ்வாறான பிரச்சாரம் அரசாங்கத்தைப் பொறுத்து இன்று அவசியமானதொன்றாக உள்ளது.

ஏனெனில் சிறிலங்காவிற்கு இன்று பெரும்தொகை நிதி தேவையானதாகவுள்ளது. அது கிடைக்கப்பெறுவதற்கான வாய்ப்புக்களும் பிரகாசமானதாகவே உள்ளது. ஆனால் சுனாமி தொடர்பான பொதுக்கட்டமைப்பிற்கு அரசாங்கம் இணங்கி வருதல் என்பது இதற்கு அவசியமானதாகும். இந்நிலையில் அரசாங்கம் பொதுக் கட்டமைப்புப் பற்றிப்பேசுவது தவிர்க்க முடியாததாகிறது இது கடந்த கால அனுபவத்தைக் கொண்டது என்று கூடக் கூறலாம்.

அதாவது, சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகள் டோக்கியோ மாநாட்டில் 40000 கோடி ரூபாவை வழங்குவதற்குத் தயாராக இருந்த போதும், சமாதானப் பேச்சு வார்த்தைகளில் ஏற்பட்ட பின்னடைவு இதுகிடைக்காமல் போவதற்குக் காரணமாகியது. இத்தகையதொரு நிலை சுனாமி உதவி நிதிக்கும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் சிறிலங்கா அக்கறை கொண்டுள்ளமையே தற்பொழுது பொதுக்கட்டமைப்புக் குறித்து நம்பிக்கை ஊட்டுவதில் அரசாங்கம் காட்டும் அக்கறையாகும்.

அதாவது டோக்கியோ மாநாட்டு நிதிக்கு ஏற்பட்டது போன்றதொருநிலை சுனாமி அனர்த்த நிதியுதவிக்கும் கிட்டிவிடக்கூடாது என்பதே சந்திரிகா அரசின் எதிர்பார்ப்பாகும். இது ஜே.வி.பி க்கும் உணர்த்தப்பட்டுள்ளது போல் தெரிகின்றது. இதன் அடிப்படையிலேயே தற்பொழுது பொதுக்கட்டமைப்புக் குறித்து அரசாங்கத்தால் நம்பிக்கை ஊட்டப்படுகின்றது. ஆனால் ஆட்சியாளர்கள் எத்தகைய வாக்குறுதிகளை வெளிப்படுத்தினும் - நம்பிக்கையூட்டினும் கட்டமைப்புத் தொடர்பாக இருதரப்பும் உடன்பாட்டில் கையொப்பம் இடும் வரையிலும் அதன் மீது நம்பிக்கை கொள்வதில் அர்த்தமில்லை. இது வரலாற்றின் படிப்பினை.

# சட்ட விரோதமாக தங்கியுள்ள இலங்கையரை வெளியேற்ற அமெரிக்கா கால அவகாசம்

## -சுனாமி அனர்த்தத்தையடுத்து நடவடிக்கை

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகளிலிருந்து வந்து சட்ட விரோதமாக அமெரிக்காவில் தங்கி இருப்போர் நாட்டை விட்டு வெளியேற இப்பொழுது அமெரிக்கா அரசாங்கம் கால அவகாசம் வழங்கியுள்ளது.

விசா விதிமுறைகளை மீறிய மைக்காக உடனடியாக நாட்டை விட்டு வெளியேறுமாறு அமெரிக்கா ஏற்கனவே இவர்களுக்கு உத்தர விட்டிருந்தது. சுனாமியால் பாதிக்கப்பட்ட இவ்விரு நாடுகளும் மீள் கட்டமைப்புப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளன.

இதைக் கருத்திற் கொண்டு அமெரிக்கா இப்போது மனிதாபிமான அடிப்படையில் இவர்களுக்கு கால அவகாசம் வழங்கியுள்ளது. சட்டவிரோதமாக அமெரிக்காவில் தங்கியிருக்கும் இலங்கையருக்கும், மாலைதீவுவாசிகளுக்கும் 2005 ஆம் ஆண்டு யூலை எட்டாம் திகதி வரை தொடர்ந்து தங்கி இருக்க அமெரிக்கா வாய்ப்பளித்துள்ளது. அமெரிக்கா உள்நாட்டு பாதுகாப்புத் திணைக்களமும் குடியேற்ற சுங்க விதிமுறைகள் அமுல்படுத்தும் முகவர் நிறுவனமும், கூட்டாக கடந்த வார இறுதியில் இவ் அறிவித்தலை விடுத்துள்ளன.

அமெரிக்காவிற்கு விஜயம் செய்வோர் விசா விதிமுறைகளை மீறி இருப்பது கண்டு பிடிக்கப்பட்டால் உடனடியாகக் குடியேற்ற சுங்க விதிமுறைகள் அமுல்படுத்தும் முகவர் நிறுவனத்தால் தத்தமது நாடுகளுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படுவர். 2004ஆம் ஆண்டு டிசம்பர் சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளில் இருந்து வந்தவர்கள் விடயத்தில் விசா நடைமுறைகளுடன் குடியேற்ற சுங்க நடைமுறைவிதிகள் பின்பற்றப்படவில்லை.

பின்னர் இவ்வாறு தங்கி இருப்போர் நாட்டை விட்டுவெளியேறி விட வேண்டுமென உத்தர விடப்பட்டது. தற்போதைய அறிவித்தலில் நாட்டை விட்டு வெளியேறுமாறு உத்தரவிடப்பட்ட இலங்கையர்களும், மாலைதீவு வாசிகளும் 2005 ஆண்டு யூலை வரை தங்குவதற்கு கால அவகாசம் அளித்துள்ளது.

நாட்டை விட்டு வெளியேறுமாறு உத்தரவிடப்பட்ட அனைத்து இலங்கை, மாலைதீவுப் பிரஜைகளும் 2004ஆம் ஆண்டு டிசம்பர் 30ஆம் திகதி முதல் 90 நாட்கள் வரை மட்டுமே அமெரிக்காவில் தங்கியிருக் கலாமென முன்னர் குறிப்பிடப் பட்டிருந்தது. இவ்விரு நாடுகளும் மீள் கட்டமைப்புப் பணிகளை தொடர் வதால் இக்கால எல்லை 2005 ஆம் ஆண்டு யூலை எட்டாம் திகதி வரை நீடிக்கப் பட்டுள்ளது. இதற்கு விண்ணப்பிக்க தேவை இல்லை. என்றும் குடியேற்ற சுங்க விதிகளை அமுல் படுத்தும் முகவர் நிறுவனம் அறிவித்துள்ளது.

# சுனாமி அனர்த்த பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கு அத்திவாரம்

## —பா.உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் நம்பிக்கை

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்திற்கான பொதுக்கட்டமைப்பு தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான அத்திவாரம் என தமிழ்க்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல பொதுக்கட்டமைப்பை ஐக்கியதேசியக் கட்சி முழுமையாக ஆதரிக்கின்றது. ஒஸ்லோ உட்டன்பாட்டுக்கமைவாக அது ஏற்படுத்தப்படவேண்டும். இதற்கு எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க முழு ஆதரவையும் தெரிவித்துள்ளார். எனினும் ஏற்படுத்தப்படும் பொதுக் கட்டமைப்பில் அனைத்து இனப்பிரிவினரதும் பிரதிநிதித்துவம் அவசியம் டோக்கியோ மாநாட்டில் 45 ஆயிரம் கோடி ரூபாய் கிடைக்கவிருந்தது. அதனை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீள் நிர்மாணத்திற்குப் பயன்படுத்தப் பொதுக்கட்டமைப்பு அவசியம் என வலியுறுத்தி இருந்தோம். ஆனால் இப்போது சுனாமியின் பின் சேதங்கள் அதிகரித்திருப்பதனால் பொதுக் கட்டமைப்பு அவசியமானது எனத்தெரிவித்துள்ளார்.

# 3500 ஆசிரியர்களுக்கு உடனடி இடமாற்றம்

(கொழும்பு)

தேசிய பாடசாலைகளில் நீண்டகாலமாக கடமை புரியும் 3500 ஆசிரியர்கள் உடனடியாக இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தேசியப்பாடசாலைகளில் ஆசிரியர்கள் அதிகமாக இருப்பதாகவும் இதேவேளை நாட்டின் பல பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதனால் அந்த இடங்களை நாட்டின் பல பாடசாலைகளில் ஆசிரியர் அந்த இடங்களை நிரப்புவதற்கு தேசியப்பாடசாலைகளில் நீண்டகாலமாகக் கடமையாற்றும் ஆசிரியர்கள் உடனடியாக இடமாற்றம் செய்யப்படுவார்கள் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# குருநாகலில் திடீரென சுழல் காற்று வீசியது வீடுகள் பல சேதம்; மரங்களும் முறிந்து வீழ்ந்தன!

(கொழும்பு)

குருநாகல் பண்டுவஸ்நுவர ஹெட்டிபொல ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் கடும் காற்று வீசியதையடுத்து 23 வீடுகள் சேதமடைந்துள்ளன. அத்துடன் மரங்கள் முறிந்து விழுந்ததனால் மின்சாரமும் தடைப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாகக் கிராம வாசி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், ஒரேடியாக காற்று சுழன்று சுழன்று வீசியதாகவும், சில நிமிடங்களில் வீட்டுக்கூரைகள் பறந்தாகவும் இதனைத் தொடர்ந்து ஓரளவு மழை பெய்தாகவும் தெரிவித்தார்.

இது "தொனோலா" எனும் புயல் காற்றாக இருக்கக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் கூறுகின்றது. இது தொடர்பாக ஆய்வுகள் தொடர்ந்தும் இடம் பெறுவதாகவும் அறிவிக்கப்படுகின்றது. இது பற்றி வளிமண்டலவியல் திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் தெரிவிக்கையில், தற்போது தொடர்கின்ற காலநிலையே இதற்குக் காரணம் எனத் தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் இடியுடன் கூடிய மழை இருக்கும் எனத் தெரிவித்த அவர் சூறாவளி தோன்றாது என்றும் இருப்பினும் முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

# லங்காதீப செய்தியாளரை அச்சுறுத்திய ஐ.தே.க பா.உறுப்பினர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்து

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பாலிதரங்கே பண்டார லங்காதீப பத்திரிகை நிருபரின் கடமைகளுக்கு தடங்கல் ஏற்படுத்தி அவரை பொலிசில் ஒப்படைத்ததை அக்கட்சியின் புததளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நியூமென்பெரேரா கண்டித்துள்ளார். இது பற்றி மேலும் தெரியவருவதாவது பாலிதரங்கே பண்டாரவினால் தப்போவ குளத்தினருகே சட்டவிரோதமாக நிர்மாணிக்கப்படுவதாகக் கூறப்படுகின்ற கட்டடமொன்றைப் புகைப்படம் பிடிக்கச் சென்ற லங்காதீப பத்திரிகையின் புத்தளம் கொட்டுக்கச்சிய நிருபர் சிரான் பிரியங்கர ஜயசிங்கவின் கடமைக்கு பாலிதரங்கே பண்டார தடங்கல் ஏற்படுத்தியுள்ளார். அதன் பின்னர் ஜயசிங்கவை கருவெலப் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளார். இதனையடுத்து புத்தளம் பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்ட சிரான் ஜயசிங்க பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இச் சம்பவத்தினை கண்டித்துள்ள புத்தளம் மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் இது சம்பந்தமாக விசாரணை நடத்துமாறு சனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளதுடன் எதிர்க்கட்சித் தலைவருக்கும் அறிவித்துள்ளது.

# அரசு- புலிகள் பொதுக்கட்டமைப்பு உருவாக

## ஜே.வி.பி நிபந்தனைகளுடன் ஆதரவாம்!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு ஜே.வி.பி நிபந்தனையுடன் ஆதரவு வழங்க முன்வந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

பொதுக்கட்டமைப்பானது ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மீள் கட்டுமானப் பணிக்கான சர்வதேச நிதியுதவிகளை கையாள்வதற்கான ஏற்பாடாக மட்டும் அமைய வேண்டும்

இதற்கான சட்ட அங்கீகாரம் அல்லது பாராளுமன்ற அங்கீகாரம் பெறப்படக் கூடாது.

இதன் மூலமாக விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் அரசாங்கத் தரப்பினருடன் இணைந்து சர்வதேச பிரதிநிதிகளை சந்திப்பதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்தக் கூடாது என்பன உள்ளிட்ட சில நிபந்தனைகள் ஜே.வி.பி தரப்பால் முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

ஜே.வி.பி யின் சில முக்கிய நிபந்தனைகளை அரசாங்கம் ஏற்றுள்ளதாகவும் எனினும் சில நிபந்தனைகளை நடைமுறைப்படுத்தவதில் சிக்கல்கள் ஏற்படும் என்பதனால் அவற்றை அரசாங்கம் நிராகரித்துள்ளதாகவும் அரசாங்க தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பொதுக்கட்டமைப்புத் தொடர்பான விட்டுக் கொடுப்பிற்கு பதிலாக சமாதான முயற்ச்சிகள் தெடர்பில் அரசாங்கம் ஜே.வி.பியின் முக்கிய கோரிக்கை ஒன்றை ஏற்றுக் கொண்டுள்ளதாக ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைகளின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கக் கூடாது என்பதே ஜே.வி.பியின் நிபந்தனை என்றும் இதனை சனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

இதேவேளை பொதுக்கட்டமைப்பு விடயம் தொடர்பில் ஜே.வி.பி கடும் போக்கைக் கடைப்பிடிக்குமானால் தடைப்பட்டுள்ள சமாதான பேச்சுக்களை ஆரம்பித்து அதன் ஊடாக மீள் கட்டுமானப் பணிகளுக்கான பொறிமுறை ஒன்றை அமைக்கப் போவதாக சனாதிபதி எச்சரிக்கை விடுத்திருந்ததாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

அதேசமயம் சனாதிபதியால் சமாதான முயற்சிகள் தொடர்பில் பொதுமக்களுக்கு விளக்கமளிப்பதற்கென ஏற்படுத்தப்பட்ட விசேட குழு ஜே.வி.பியைப் பயமுறுத்தும் நடவடிக்கை என்றும் குறிப்பிடப்படுகின்றது.

சர்வதேச நிதியுதவிகள் பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படாதமையால் திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டால் அதற்குக் காரணம் ஜே.வி.பியே என்பதை இந்தக் குழுவின் மூலம் நாட்டு மக்களுக்கு எடுத்துரைக்க சனாதிபதி திட்டமிட்டிருந்ததாகவும் இது தொடர்பில் ஜே.வி.பியின் ஆதரவாளர்கள் மூலம் ஜே.வி.பி தரப்புக்கு விளக்கமளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றினை அடுத்து ஜே.வி.பி தனது நிலைப்பாட்டை மாற்றியிருப்பதாகத் தெரிய வருகின்றது.

இருந்தபோதிலும் தமது முடிவுகளை அடிக்கடி மாற்றும் ஜே.வி.பி இந்த முடிவினையும் சில வேளைகளில் மாற்றி சனாதிபதிக்குச் சவால் விடலாம் என்றும் ஊகங்கள் வெளியாகியுள்ளன. (32)

# 35 இலங்கைத் தமிழர்கள் விமானம் மூலம் தாயகம் திரும்பினர்

(கொழும்பு)

இலங்கையில் இருந்து கடந்த 1990 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து இந்தியாவிற்கு அகதிகளாகச் சென்று 15 வருடங்கள் இந்தியாவில் அகதிமுகாமில் வாழ்ந்து வந்த ஒன்பது குடும்பங்களைச் சேர்ந்த 35 பேர் விமானம் மூலம் நாடு திரும்பி உள்ளனர்.

யூ.எல்.122 என்ற விமானம் மூலம் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கினர்.

தமிழ் நாடு நாமக்கல் மாவட்டம் மேட்டுப்பட்டி அகதி முகாமி லேயே இருந்துவந்துள்ள இவர்கள் அனைவரும் வவுனியாவைச் சேர்ந்தவர்களெனத் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை விமானநிலையத்தில் வைத்து இவர்கள் செய்தியாளர்களிடம் கூறுகையில், இந்தியாவில் இருந்த காலத்தில் நிறையக் கூலிவேலை செய்ததாகவும் படாதபாடெல்லாம் இந்தப் பதினைந்து வருடகாலத்தில் தாங்கள் பட்டுவிட்டதாகவும் கூறினார்கள்

# வடமராட்சியில் சுனாமியால் பாதிப்புற்றோருக்கு 2774 நிரந்தர வீடுகள் அமைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட யாழ்.வடமராட்சிப் பிரதேச மக்களுக்காக 2774 நிரந்தர வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய உதவி அரச அதிபர் பணிமனையின் கீழ் உள்ள 18 கிராமங்களில் இந்நிரந்தர வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

ஒவ்வொன்றும் 500 சதுர அடிகளைக் கொண்டதும் மலசலகூடம், குடிநீர் உட்பட்ட சகல அடிப்படை வசதிகளைக் கொண்டதுமாக அமைக்கப்படவுள்ள இவ்வீடுகளை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வேள்ட் விஷன், கியூமெடிக்கா, செஞ்சிலுவைச் சங்கம், றொன்பொஸ் கோரஸ்ட், சர்வதேச புனர்வாழ்வு அமைப்பு எனப் பல்வேறு அரச சார்பற்ற அமைப்புக்களும் இந் நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுக்கவுள்ளன. (33)

## திருத்தப் பணிகளுக்காக மின்சாரம் நிறுத்தம்

(அலுவலக செய்தியாளர்)

இன்று காலை 7.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை கிளிநொச்சி கந்தசாமி ஆலயமுன்றலிலிருந்து கரடிபோக்கு சந்திக்கிடைப்பட்ட பகுதிகளில் மின்சாரம் நிறுத்தப்படவுள்ளதென மின்சாரசபையினர் தெரிவித்துள்ளனர்.

பரந்தன் பகுதிக்கான உயர மூத்த மின்கம்பி இணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பெறவுள்ளமையின் காரணமாகவே மேற்படி மின்சாரத்தடை ஏற்படுத்தப்பட்டுள்ளதென மின்சார சபையினர் வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துள்ளனர். (சோ)

## கண் சத்திரசிகிச்சைக்கு பதிவு செய்ய அழைப்பு

(அலுவலக செய்தியாளர்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலிருந்து வருகை தரும் கண் சத்திரசிகிச்சை நிபுணரினால் எதிர்வரும் 23 ஆம் திகதியன்று புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் மருத்துவமனையில் கண் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பெறவுள்ளது. எனவே கண்ணில் பூவளர்தல் மற்றும் கண் கற்றாக் உள்ளவர்கள் எதிர்வரும் 18ஆம் திகதியன்று கிளிநொச்சி டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவ மனை வெளிநோயாளர் பிரிவிலும், 19ஆம், 20ஆம் திகதிகளில் புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவிலும் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளும் வண்ணம் மருத்துவமனை நிர்வாகத்தினர் வேண்டுகை விடுத்துள்ளனர். (சோ)

## சாரதிய அனுமதிப்பத்திரம் வழங்க புதிய வைத்திய சான்றிதழ் கோரல்

(அலுவலக செய்தியாளர்)

கடந்த வருடம் நவம்பர் மாதம் 13, 14 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற உந்துருளி ஓட்டுநர்க்கான சாரதிய அனுமதிப்பத்திரத்திற்கான எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களில் அனேகமானவர்களின் வைத்தியச் சான்றிதழ்கள் ஆறுமாதங்களுக்கு மேற்பட்டுள்ளமையின் காரணமாக அவை காலாவதியாகியுள்ளதென கிளிநொச்சி மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் செயலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

எனவே அவ்வாறானவர்கள் புதிய வைத்திய சான்றிதழ்களைப் பெற்று எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்பதாக கிளிநொச்சி மாவட்ட மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் காரியாலயத்தில் சமர்ப்பிக்கும் படியும் புதிய வைத்திய சான்றிதழ்களை சமர்ப்பிக்கத்தவறும்பட்சத்தில் எதிர்வரும் 29, 30 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதனை கிளி.மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார். (சோ)

### மே தின....

சந்தி வந்தடைந்து அரசடி வீதியூடாக நல்லூர் கந்தசுவாமி கோயில்முன்றலில் அமைக்கப்பட்ட விசேட மேடையை வந்தடையும் அங்கு அடக்கு முறையை உடைக்கும் குரலாக மே தினப் பிரகடனம் செய்யப்படும். தொடர்ந்து மேதின எழுச்சிக் கூட்டமும், கலை நிகழ்வுகளும் நடைபெறும்.

இப்பேரணியில் பொது அமைப்புக்களின் ஒன்றியம், கழகங்களின் சங்கம், ஆசிரியர் சங்கம் மற்றும் பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மற்றும் பொது நிறுவனங்களும் பல விதமான அடக்குமுறைகளையும் சித்தரிக்கும் ஊர்திகளுடன் பெருமெடுப்பில் கலந்துகொள்ளவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகள் பற்றிய கூட்டம் நேற்று யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலைஅரங்கில் மாலை 3.30 மணிக்கு மாவட்ட பொதுஅமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சூ.சிறில் தலைமையில் இடம்பெற்றது. (சு,33)

### கிறிஸ்டினா...

சிறிலங்கா சனாதிபதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருடனும் கிறிஸ்டினா றொக்கா பேச்சுகள் நடாத்தவுள்ளார். நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சூல்ஹெய்மையும் கிறிஸ்டினா சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இப்பேச்சுவார்த்தை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என்றும் கூறப்படுகிறது. அமெரிக்கத் தூதரகத்தின் புதிய நூலகத்தையும் கிறிஸ்டினா திறந்து வைக்கவுள்ளார்.

### பரஸ்பர....

புரிந்துணர்வு ஒப்பந்த நிறைவேற்றத்திலுள்ள முட்டுக்கட்டைகள் மற்றும் பேச்சுவார்த்தைகளிற்கான தடைகள் என்பனவற்றை தெளிவுபடுத்தியிருந்தமை தெரிந்ததே.

மேலும் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் அங்கு சுனாமி நிவாரண சர்வதேச உதவி நிதியினைப் பகிர்வதற்கான முகாமைத்துவ இணைந்த பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதில் அரசின் பதிலிற்காகவே தாமதம் ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளதுடன் தமிழ்ப்பிரதேசங்களின் சுனாமிப் பாதிப்புக்களின் நிலைமைகளது தன்மைகளை மதிப்பீடு செய்வதற்கு குழு ஒன்றினை அனுப்பிவைக்கவும் அமைச்சரிடம் அழைப்பு விடுத்துள்ளார்.

### தேசவிரோதக்...

மடைந்தவர்களில் கருணா அணியின் பெயரில் செயற்படுவர்களில் ஒருவரான புள்ளையான் என்பவரும் முக்கியமானவர்களாகும்.

இதேவேளை, இச்சம்பவத்தில் காயமடைந்த கருணாவின் பெயரில் இயங்கும் குழுவைச் சேர்ந்த புள்ளையான் மற்றும் சின்னத்தம்பி மகேஸ்வரன் ஆகியோர் பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதை விட மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

இதேசமயம், இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட ஐந்து பேரின் சடலங்களைச் சிறிலங்காப் பொலிசார் மீட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கொல்லப்பட்டவர்கள் தொடர்பாக உத்தியோகபூர்வமான தகவல் எதுவும் வெளியா காத போதும் துரை என அழைக்கப்படும் சின்னப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை, கவி என அழைக்கப்படும் செல்லையா குழந்தைவேல், வாசு என அழைக்கப்படும் தேவதாசன் தெய்வேந்திரன், விஜயன் என அழைக்கப்படும் இராசேந்திரன் பேரின்பநாதன், காந்தன் என அழைக்கப்படும் கந்தசாமி ஜெயநிதன் ஆகியோரின் சடலங்களே மீட்கப்பட்டுள்ளன.

இவர்களின் உடல்கள் பொலநறுவை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொல்லப்பட்டவர்கள் ஒன்பது பேரின் சடலங்களைத் தாங்கள் கண்டதாக மக்கள் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, இச்சம்பவம் தொடர்பாக மக்கள் தெரிவித்துள்ள தகவலின்படி சில நாட்களின் முன்னரே இம்முகாம் அமைக்கப்பட்டுள்ளதாகவும், இச்சம்பவத்தின் போது சண்டை இடம்பெற்றது போன்று பெருமளவில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் எதுவும் கேட்கவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய நிலையில், இக் குழுவில் இருந்தவர்களே இத்துப்பாக்கிச் சூட்டை நடத்தியிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (32)

### பொதுக்....

ஹெய்ம் அங்கு இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார். 19 ஆம் திகதி மட்டக்களப்பிற்குச் செல்லும் எரிக் சூல்ஹெய்ம் தற்போதைய பாதுகாப்பு நிலவரம் மற்றும் ஆழிப்பேரலையின் விளைவுகள், மீளமைப்புகள் குறித்துக் கலந்துரையாடுகிறார். அரசியல் தலைவர்கள், சிவில் சமூகப்பிரதிநிதிகள், உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் ஆகியோருடனும் எரிக் ஆலோசனை நடத்தவுள்ளார். இச்சந்திப்புக்களின் போது அரசியல் நிலைமைகள் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மீள்கட்டமைப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படும் என்று நோர்வேத் தூதரகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிகொட் திட்டத்தின் மூலம் உழவு இயந்திரம் வழங்கல்

(வவுனியா)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் நிகொட் நிறுவனத்தினால் இதுவரை26 உழவு இயந்திரங்களும், 26 தண்ணீர் தாங்கிகளும், வவுனியா, மன்னார் முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டு இருப்பதாக வவுனியா நிகொட் திட்ட பிரதிப் பணிப்பாள்ர் எஸ் கிருபாசுதன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வவுனியா அரச செயலகத்தில் இரண்டு உழவு இயந்திரங்கள் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச காரியாலயத்திற்கும் செட்டிகுளம் பிரதேச செயலாளர் காரியாலயத்திற்கும் வழங்கப்பட்டன.

வவுனியா அரச செயலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வவுனியா அரச அதிபரினால் இந்த உழவு இயந்திரங்கள் ஒப்படைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதேச செயலாள்கள, வவுனியா நிகொட் திட்ட பிரதி பணிப்பாளர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (21)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது